57

1.2.55.

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

807
1-55

பிப்ரவரி 11உ முதல்

சென்னை வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி மூன்று தியேட்டர்களிலும்

மற்றும் தமிழ்நாடெங்கும்

லலிதா • சகஸ்ரநாமம் • சுந்தரிபாய் • எஸ்.வி.சுப்பய்யா

வனஜா • ஆர். கணேசன் • டி. எஸ். துரைராஜ் • பி.எஸ். ஞானம் நடித்தது

டைரக்ஷன்: கொத்தமங்கலம் சுப்பு

ஸ்டூடியோ: ஜெமினி • ஜெமினி ரிலீஸ்

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 3

1 - 2 - '55

குழந்தைகளே	பக்கம்	2
குழந்தைகள் கூட்டத்தில் நேரு	..	3
வீடர் மணி	..	4
குருடனின் கதை	..	9
மகள் கிடைத்தாள்	..	13
வானவில்	..	16
கேளுங்கள், சொல்கிறேன்		17
தண்டனை	..	20
துப்பறியும் சுப்புசாமி	..	24
ஷாவின் தாடி	..	26
பொறுமைக்கார நரி	..	27
பாரஸீக ரோஜா	..	29
எங்கள் பகுதி	..	31
புதிர்க் கேள்விகள்	..	33
போட்டோ க்விஸ்	..	34
பாலர் கவி அரங்கம்	..	36
சந்திரகிரிக்கோட்டை	..	37
செய்திகள் - 3-ஆவது அட்டை		

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன். மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அருமையான சம்பவம்

மாலை மணி ஆறு. கதிரவன் கடலில் மூழ்கிக்கொண்டிருந்தான். சோபாவில் சாய்ந்துகொண்டு ரேடியோ கேட்பதில் ஈடுபட்டிருந்த ஸ்ரீநிவாஸ முதலியார், 'டக் டக்' என்ற காலடியோசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். செல்வக்குமாரன் விசுவம் பம்பாயிலிருந்து வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்ட முதலியாருக்குச் சந்தோஷம் பொங்கியெழுந்தது. அன்றிரவு முழுவதும் அவன் தன்னுடைய பிரயாணத்தைப் பற்றி வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் சொல்லித் தீர்த்தான்.

பம்பாய்க்குப் போய்விட்டு வந்த பிறகு, மற்றவர்களைவிட ஒரு படி உயர்ந்தவன் என்று அவன் தன்னை நினைத்துக்கொண்டான். யார் எதைப்பற்றிப் பேசினாலும் நடுவிலே பம்பாயைக் கொண்டுவந்து நுழைக்காமல் இருக்கமாட்டான்.

அவனுடைய பேச்சு எல்லோருக்கும் தலைவேதனையாக இருந்தது. நாளடைவில் பொறுக்க முடியாமலும் போய்விட்டது.

ஒரு நாள் வீட்டில் நிலாச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு முதலியார் நண்பர்களுடன் கூடத்தில் பேசிக்கொண்டிருந்தார்.

"இன்று இரவு சந்திரன் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்றார் ஒரு நண்பர்.

அப்போது விசுவம் அங்கே வந்து சேர்ந்தான் அவர்கள் பேச்சுக்கு நடுவே. "இதெல்லாம் என்ன மாமா நிலா? பம்பாயில் பார்க்கவேண்டுமே நிலாவை! ஆஹா ஹா!" என்றான் விசுவம்.

அதைக் கேட்டுக் கோபமடைந்த முதலியார் விசுவத்தின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தார். "இது எப்படி இருக்கிறது!" என்றார் மாமா.

விசுவம் அழுதுகொண்டே. "அடேயப்பா, இதெல்லாம் என்ன அறை! பம்பாயில் யாராவது அறைந்தால் எப்படி இருக்கும் தெரியுமா?" என்றான்.

இதைக் கேட்ட எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

—ரா. வே. சுப்ரமணியன், திருச்சி.

குழந்தைகளே!

உங்களுடைய பொங்கல் வாழ்த்துக்களுக்கு என்னால் தனித் தனியே பதில் எழுதிச் சாத்தியப்படவில்லை. ஏதோ முடிந்தவரையில் எழுதினேன். பதில் பெறாதவர்கள் என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் பல்லாயிரம் பேர்; நானே ஒருவன். எத்தனை பேருக்குத்தான் என்னால் எழுதமுடியும்? அதனால் இதன் மூலம் உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பாரஸீக ரோஜா' என்ற புதிய சித்திரத் தொடர்கதை உங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். கதையின் ஆரம்பம் இருக்கட்டும்; கதையே போகப் போக இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும். அடுத்த இதழ் எப்போது வரும் என்றுதான் ஆவலாக இருக்கப்போகிறீர்கள்; நிச்சயம்.

'லீடர் மணி' என்ற கதையை முதலில் படிக்க விட்டுப் போனவர்கள் இப்பொழுது ஆரம்பம் முதல் கிடைக்குமா என்று எழுதிக் கேட்கிறார்கள். இதிலிருந்தே உங்களுடைய பாராட்டுதலை 'லீடர் மணி' பெற்றுவிட்டான் என்று தெரிகிறது. போனது போகட்டும். இனியாவது தொடர்ந்து படியுங்கள். முன் பகுதிகள் கிடைத்தால் சேர்த்துக் கொள்ளலாம். சந்திரகிரிக் கோட்டையையும் இதே போலத்தான் கேட்கிறார்கள். நடு நடுவில் சில இதழ்கள் கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். இதற்காகத்தான் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுங்கள் என்று சொல்கிறேன். சந்தா சேர்ந்துவிட்டால் இந்த வம்பெல்லாம் இருக்காது அல்லவா? விரைவிலேயே சந்திரகிரிக் கோட்டையைப் புத்தகமாக வெளியிட எண்ணியிருக்கிறோம். இப்பொழுது விட்டுப்போன பகுதிகளை அப்பொழுது வாங்கிப் படித்துக்கொள்ள வேண்டியதுதான். வேறு என்ன செய்வது?

சென்ற வருஷத்தைப் போலவே இந்த வருஷமும் பொங்கல் முதல் பரிசுப் பாக்கெட்டுகள் விற்பனையாகின்றன. எல்லாக் கண்ணன் வெளியீடுகளையும் சேர்த்து அழகிய பரிசுப் பாக்கெட்டுகளாகத் தயாரித்துள்ளோம். இதுவரையில் மொத்தம் 20 கண்ணன் வெளியீடுகள் வந்திருக்கின்றன. அவற்றில் 'ராஜாவும் குருவியும்' என்ற புத்தகமும் 'தங்கத்தின் பந்து' என்ற புத்தகமும் இப்போது தீர்ந்துவிட்டன. மீதி 18 வெளியீடுகள். இவற்றைத் தனித் தனியாக வாங்கினால் ரூ. 7-8-0 ஆகும். பரிசுப் பாக்கெட்டுகளாக வாங்கினால் ரூ. 5/-தான். வெளியூரிலிருந்து தபாலில் வேண்டுபவர்கள் தபால் செலவுக்காக ரூ. 1/-சேர்த்து, கண்ணன் காரியாலயத்துக்கு அனுப்பவேண்டும்.

சென்ற வருஷம் பரிசுப் பாக்கெட்டுகள் வாங்கியவர்கள் மீதியுள்ள புதுப் புத்தகங்களுக்கு மட்டும் எழுதலாம். அவர்கள் 25 சதவிகிதம் கழித்துக்கொண்டு மீதியை அனுப்பினால் போதும். தபால் செலவுக்கு எட்டணாவும் சேர்த்து அனுப்பவேண்டும். சென்னையில் காங்கிரஸ் கண்காட்சி முடியும் வரையில்தான் பரிசுப் பாக்கெட்டுகள் கிடைக்கும். அதற்குள் வாங்கிவிட முயலுங்கள்.

இந்த வருஷத்து அதிருஷ்டக் குழந்தைகளைச் சந்தாதார் பெயர்களிலிருந்து சீட்டுக் குலுக்கி எடுக்கப் போகிறோம். ஜனவரி 31-ஆம் தேதிக்குள் சந்தா அனுப்பியவர்கள் அனைவரும் இதில் சேர்க்கப்படுவார்கள். ஜனவரியில் புதிதாகச் சேர்ந்த சிலருக்குக் கண்ணன் இல்லாததால் அனுப்பமுடியவில்லை. பிப்ரவரி முதல் பிரதிகள் அனுப்பப்படும்.

—ஆசிரியர்.

குழந்தைகள் கூட்டத்தில் நேரு

சென்னை, கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் சுமார் முப்பத்தையாயிரம் குழந்தைகள் கூடி, பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவுக்கு உற்சாகமான வரவேற்பளித்தார்கள். தேசிய மாணவர் படை, சாரணர் படை, சாரணியர் படை ஆகியவற்றை நேரு பார்வையிட்டார். பிறகு குழந்தைகளின் கேளிக்கைக் காட்சிகள் நடைபெற்றன.

தஞ்சாவூர் மாணவர்களின் 'பண்டார சந்நிதி' ஊர்வலம் முதலில் வந்தது. இருவர் புரவியாட்டம் ஆடினார்கள். ஒரு மாணவன் கரகம் எடுத்து ஆடினான். இன்னொருவன் காவடி எடுத்து ஆடினான். பெண்கள் கோலாட்டமடித்தார்கள். பின்னால் பண்டார சந்நிதி பல்லக்கில் அமர்ந்து வந்தார்.

அடுத்ததாக உலக நாடுகள் காட்சி நடைபெற்றது. பல நாட்டு உடைகளை அணிந்துகொண்டு, அந்த அந்த நாட்டுச் சங்கீதத்துடன் மாணவ மாணவிகள் லாரிகளில் ஏறி பவனி வந்தார்கள். முதல் லாரியில் பாரத மாதாவும் அவள் குழந்தைகளும் காட்சியளித்தார்கள். அதைத் தொடர்ந்து பல நாடுகள் வந்தன. கடைசி மோட்டாரில் சாமாதான தேவதை இருந்தாள். தும்பைப் பூப்போன்ற தூய வெள்ளை ஆடை. அவள் நேருஜியிடம் சமாதானத்துக்கு அடையாளமான ஆலீவ் மரக் கிளையையும் வெண்புறு ஒன்றையும் கொடுத்தாள். நேரு அதை வாங்கிப் பறக்க விட்ட காட்சி அற்புதக் காட்சியாக இருந்தது.

நேரு குழந்தைகள் கூட்டத்தில் பேசியதாவது:

''அன்புமிக்க குழந்தைகளே!

இந்தப் பாரத நாட்டின் புஷ்பங்களாகிய உங்களைக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பாரத நாடாகிய பெரிய தோட்டத்தில் செடிகள், கொடிகள், சிறிய பெரிய மரங்கள் எல்லாம் இருக்கின்றன. நீங்களோ இனிய மலர்கள். உங்களைக் காணும் போதெல்லாம் நான் குதூகலப்படுகிறேன். இந்தியா வெங்கும் குழந்தைகளைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நவ பாரதத்தைச் சிருஷ்டிப்பதற்கு நீங்கள் பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெறுகிறீர்கள். பயிற்சி பெறுவதற்குப் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. ஆடிப் பாடவேண்டும். நாட்டைப்பற்றியும் அதில் உள்ள எல்லா மக்களைப் பற்றியும் நீங்கள் நன்றாக அறிந்துகொள்ளவேண்டும். நம் நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குடும்பம். அனைவரும் ஒற்றுமையோடு நவ இந்தியாவைச் சிருஷ்டிக்க வேண்டும். புஷ்பங்களாகிய நீங்கள் நன்றாக மலர்ந்து இந்த இந்தியப் பூங்காவை அழகாக்குவீர்கள் என்று நம்புகிறேன்.''

விளையாட்டு ரொம்பச் சுவாரசியமாக இருந்தது. சங்கரபுரத்து விளையாட்டுக்கும் சென்னை விளையாட்டுக்கும் அடேயப்பா, எத்தனை தூரம் இருந்தது! இங்கே ஆட்டம் நெருப்புப்பொறி பறந்தது. அங்கே என்றால் எடுத்ததற்கெல்லாம் அழுகுணி அடிப்பார்கள். 'கை பட்டது' என்பார்கள். 'அவுட்' என்பார்கள்; 'இல்லை, சத்தியமாக இல்லை' என்று சாதிப்பார்கள். அப்படியெல்லாம் இருந்தாலும் ஆட்டமாவது விறுவிறுப்பாக இருக்குமா? அப்படியும் இருக்காது. சும்மா சொத்தை அடியெல்லாம் அடிப்பார்கள். நோஞ்சல் ஓட்டமெல்லாம் ஓடுவார்கள். இங்கே அந்த மாதிரியா? பந்து எவ்வளவு அழகாகக் கால்கள் மாறி மாறி வந்தது! ரொம்பக் கணக்காகப் பந்து கட்சிக்காரன் காலுக்கே போய்ச் சேர்ந்துகொண்டிருந்தது. ஒரு நொடியில் இந்தக் கோல் பக்கம் பிரமாத போராட்டம் நடந்துகொண்டிருக்கும். அடுத்த கணம், 'கும்' என்று ஒரு சத்தம்! அவ்வளவுதான்! பந்து எதிர்க் கட்சிக் கோலுக்கருகில் போய் விழும். அங்கே ஒருவன் இப்படியெல்லாம் பந்து வந்து சேரும் என்று காத்திருப்பதுபோல் நிற்பான். அவன் காலருகில் போய் விழும் பந்து. அவ்வளவு கணக்கு; அவ்வளவு நிதானம். பந்து சீக்கிரமாகப் போகிறதா, கூட்டம் சீக்கிரமாகப் போய்ச் சேருகிறதா என்று சொல்ல முடியாதபடி, கண் மூடிக் கண் திறப்பதற்குள் அங்கே அத்தனை பேரும் போய்ப் பந்தைத் தடுப்பார்கள். கோல் கீப்பர் பந்தை உள்ளே விட்டு விட்டுக் கோட்டை விடாமல் இருப்பதற்காக உயிரைக்கூடக் கொடுக்கத் தயாராக இருப்பான் போலிருந்தது. பந்தோடு கட்டிப் புரண்டு அதைத் தடுத்துவிடுவான். 'ஆகா, ஆட்டம் என்றால் இதுவல்லவா ஆட்டம்!' என்று தோன்றியது மணிக்கு. பசி கூட மறந்துவிட்டது ஆட்டத்தின் ஜோரில்.

மணி இதுவரையில் பைனாகுலரைப் பார்த்ததில்லை. ஆனால் கேள்விப் பட்டிருந்தான். முன்னால் காலரி போன்ற இடத்தில் இருந்த இரண்டொருவர் பைனாகுலர் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்தார்கள். அதுதான் பைனாகுலர் என்பது தெரியாத மணி கங்கனிடம் வந்து. "அது என்னடா கறுப்பாய் குழாய்கள் மாதிரி இருக்கு?" என்று இரைந்து கேட்டான்.

இவன் கேட்டதை இன்னொருவர் பார்த்து விட்டார். அதனால் கங்கனுக்கு மிகவும் அவமானமாகப் போய் விட்டது. "சும்மா

இருடா, பட்டிக்காட்டுப் பயலே! உன்னோடு இங்கே எல்லாம் வந்ததே தப்புடா!'' என்றான்.

மணி பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொண்டான்.

இதைப் பார்த்துக்கொண் டிருந்தாரே ஒருவர் அவருக்கு அப்படி ஒன்றும் வயதாகிவிட வில்லை. அவனும் ஒரு காலேஜ் மாணவன் தான். லேசாக மீசை அரும்பு கட்டியிருந்தது. அவன் உடனே மணியருகில் வந்து அன்போடு அவன் தோளைப் பிடித்துக் கொண்டு, ''தம்பீ! அதுதான் பைனாகுலர். தூரதிருஷ்டிக் கண்ணாடியில் ஒருவகை. அதை வைத்துக் கொண்டு பார்த்தால் எல்லாம் அருகில் நடப்பது போல நன்றாகத் தெரியும்'' என்றான்.

''ரொம்பத் தாங்க்ஸ், ஸார்!'' என்றான் மணி.

அந்த மாணவ இளைஞன் மணியின் முதுகில் அன்போடு தட்டி விட்டு, புன்சிரிப்புடன் சென்றான். பற்கள் என்ன பளிச்சென்று இருந்தது! அவனுடைய முகம் தான் என்ன களையாக இருந்தது! அவ்வளவு பளிச்சென்று அவனுடைய அன்பான வார்த்தைகள் மணிக்கு அமுதமாக ஒலித்தன. அன்பான சொற்களைக் கேட்டுத் தான் எத்தனை நாட்களாகிவிட்டன!

மணியும் கங்கனும் ஆட்டம் முடியும் வரையில் அங்கேயே நின்று வேடிக்கை பார்த்தார்கள். இருள் மெல்ல மெல்லத் தன் சிறகை விரிப்பது போல் விரித்துப் பரப்பியது. சமுத்திரக் காற்று குளிர் எடுக்கும்படி வீசியது. இதில் பசி வேறு ஆயிற்றா? மணிக்கு வாயைத் திறந்து பேசினால் காது குப் குப்பென்று அடைத்துக்கொண்டது; கொட கொடவென்று சத்தம் கேட்டது.

அந்த மைதானத்தை விட்டு இருவரும் வெளியில் வந்தார்கள். சுற்றிச் சுற்றி எங்கே போவது? மறுபடியும் தெருத் தெருவாக அலைந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஜனக் கூட்டம். அவ்வளவு பேருக்கும் வீடு வாசல் என்று இருந்தன. சிறுவர்களும் சிறுமியரும் தம் தம் பெற்றோர்களுடன் உல்லாசமாகக் காற்று வாங்கி விட்டுப் போகும் காட்சி கண் நிறைந்த காட்சியாக இருந்தது. 'அந்தப் பையன் இருந்த இடத்தில் நானும் இருந்தால்-' என்று தான் மணி தன் போன்ற பையன்களைப் பார்க்கும் போதெல்லாம் எண்ணினான். அந்த மாதிரியான பாக்கியம் எனக்கு இனி இந்த ஜன்மத்தில் ஏது? என் அப்பாவும் சித்தியும் இப்படி ஒரு நாளும் பீச்சுக்கென்று புறப்படப் போவதும் இல்லை; நானும் அவர்களுடன் போவது என்ற பேச்சுக்கும் இடமில்லை!' என்று தோன்றிய போதெல்லாம் அவனுக்குப் பெருமூச்சுதான் வந்தது. 'ஹூம்; ஹூம்!' என்று வருத்தத்தினாலும் பசியினாலும் பெருமூச்சு விட்டுக் கொண்டே நடந்தான்.

கங்கன் வாயைத் திறக்கவில்லை. சுமார் இரண்டு மைல் தூரம் நடந்திருப்பார்கள்.



போலீஸ்: ஏண்டா அவர் மேலே சைக்கிளை விட்டே?

பையன்: நீங்கதான் ஆளைப் பாத்து விட்டுக் கொண்டு போகச் சொன்னீங்களே!

—N. K. தேவராஜு, திருச்சி

பாட்டி: டேய் கண்ணு, ஏன் காமிராவைப் படுக்கையில் வச்சிருக்கே?

பையன்: தாத்தா அடிக்கடி கனவில் வருகிறார். பாட்டி, அவரை இன்றிரவு போட்டோ பிடிக்கப் போகிறேன், பாட்டி.

—P. ஆறுமுகம், திருப்பூர்.

கடைசியாக மணி எரிச்சல் தாங்க மாட்டாமல், "அடேய், சாப்பிடா விட்டாலும் தொலே யட்டும்; நடந்து நடந்து என் கால் அப்படியே கெஞ்சறதுடா! எங்கே யானும் உட்காரவாவது இடம் பாருடா!" என்றான்.

"நான் பாக்கறது என்ன; உனக்குக் கண் இல்லியா? நீதான் பாரேன். எனக்கும்தான் கால் வலிக்கிறது?"? என்றான் கங்கன்.

"உன்னாலே தாண்டா நான் கெட்டேன்!" என்றான் மணி.

"இப்படியெல்லாம் சொன்னியோ பல்லே உடைச்சுடுவேன்!" என்றான் கங்கன்.

பேச்சு தடித்தது. இருவரும் ஒருவர் பல்லே ஒருவர் உடைக்கத் தயாராகி விடுவார்கள்போ லிருந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ இருவரும் தாமாகவே அடங்கி விட்டார்கள். தடுப்பதற்கு ஆள் யாரும் இல்லாததே நல்லதாகப் போயிற்று.

அவர்கள் இருவரும் கடைசியாக வந்து சேர்ந்த இடம் ஒரு காலேஜின் ஹாஸ்டல் மைதானம். அங்கே விளையாட்டு மைதானமும் அதை யடுத்து விசாலமான இடமும் இருந்தன. ஆங்காங்கே மாமரங்களும் வேறு பல மரங்களும் இருந்தன. நல்ல வெயில் நேரத்தில் வந்து உட்கார்ந்து குஷியாகப் பொழுதைக் கழிப்பதற்கு ஏற்ற இடம். அந்த மரங்களுக்கு நடுவில் சிமென்ட் பெஞ்சுகள் இரண்டு போடப்பட் டிருந்தன. அந்தப் பெஞ்சைப் பார்த்ததும், "போய் உட்கார், போய் உட்கார்" என்று கால்கள் இருவரையுமே முடுக்கின. ஆளுக்கு ஒரு பெஞ்சாகப் போய் உட்கார்ந்தார்கள். கொஞ்சம் தாமதித்து வந்திருந்தால் வாசல் வழியே வந்த கம்பிக் கதவு பூட்டப்பட்டிருக்கும். ஒரு கிழ காவற்காரன் அதைப் பூட்டி விட்டுப் போனான்.

சிறிது நேரம் இருவரும் உட்கார்ந்து பார்த்தார்கள். ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள மனம் இடம் கொடுக்கவில்லை. எத்தனை நேரம்தான் சும்மா உட்கார்ந்திருக்க முடியும்? மணி மெதுவாகக் காலை நீட்டிக்கொண்டு பெஞ்சில் படுக்கப் போனான். 'இன்றைக்கு நல்ல காலம் படுக்கவாவது ஓர் இடம் கிடைத்ததே' என்று அவன் மனம் ஆறுதல் கொண்டது.

பெஞ்சு கொஞ்சம் மணலாக இருந்தபடியால் மணி கையாலேயே அதைத் தட்டி விட்டான். இரண்டு மூன்று தடவை தட்டிய பிறகு, கையில் டக்கென்று ஏதோ தட்டுப் பட்டது.

இருட்டு வேளை; மேலும் மரத்தடி! அதனால் முதலில் சிறிது தயங்கினான் மணி. இருந்தாலும் கையில் தட்டுப்பட்ட பொருள் அத்தனை பயப்படுத்துவதாக இல்லை. எனவே தைரியமாக அது என்ன என்று கையினால் எடுத்துப் பார்த்தான்.

அவனுக்கு உடனே ஏற்பட்ட உணர்ச்சி ஆனந்தமா, ஆச்சரி

யமா, பயமா என்று பிடிபட வில்லை! அது ஒரு மணிபர்ஸ். சந்தேகமில்லை; மணி கையினுல் அதை நன்ருகத் தடவி எடுத்துப் பார்த்தான். மணிபர்ஸேதான். உள்ளேயிருந்த சில்லறையும் பணமும் கையில் நன்ருகத் தட்டுப்பட்டன. லேசாக அது கனத்தது. அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில், ''அடே கங்கா! காசுடா! மணிபர்ஸ்டா!'' என்ருன்!

அப்படி இரைந்து கத்திய பிறகு தான் என்ன மடத்தனம் பண்ணி விட்டோம் என்று தெரிந்தது. கொஞ்சங்கூட யோசனை செய்யாமல், சற்று முன் போட்ட சண்டையின் ஞாபகமும் இல்லாமல் சொல்லிவிட்டோமே என்று இருந்தது அவனுக்கு.

இனி என்ன செய்ய முடியும்? சொன்னதைச் சொல்லியாகிவிட்டது. இனிமேல் அதை மறைக்கவும் கூடாது; மறுக்கவும் முடியாது. 'எதற்காக நான் இந்தப் பயலைப்போல் புளுகவேண்டும்?' என்றுதான் அவன் மனம் முதலில் எண்ணியது.

பர்ஸ் என்றதுமே கங்கன் ஒரே துள்ளாகத் துள்ளி அருகில் ஓடி வந்தான்.

''எங்கேடா, எங்கேடா?''

மணியின் மனத்தில் உள்ளதைச் சொல்லிவிடுவோமா, இல்லை மழுப்பிவிடுவோமா என்ற



யோசனை பலமாகப் போராடியது. கடைசியில், ''சீ! ஏமாந்து போயிட்டேன். பர்ஸுமில்லை, ஒன்றுமில்லை; ஓட்டாஞ்சல்லி!'' என்று சத்தம் போட்டான்.

''ஓட்டாஞ்சல்லியா? எங்கே?'' என்றான் கங்கன் இன்னும் அருகில் வந்து.

''எங்கேயா? அதைப் பைக்குள்ளே எடுத்துப் போட்டுக்குவேனா? கீழேதான் போட்டேன், பாரேன், தேடி!'' என்றான் மணி.

கங்கன் உடனே கீழே குனிந்து இருட்டில் கையால் தடவித் தடவிப் பார்த்தான். ''காணோமேடா எதையும்! நீ சரியாப் பாத்தயோ? மணிபர்ஸா இருக்கப்போறதுடா! அதுக்குள்ளே அவசரப்பட்டு உன்னை எவண்டா விட்டெறியச் சொன்னது?'' என்று கோபித்துக் கொண்டான்.

''அதுக்குக்கூட உன் உத்தரவு வேணுமோ? இனிமே அப்படி ஏதாவது அகப்பட்டால் அப்படியே செய்யறேன். சரிதானே?'' என்றான் மணி,

கங்கன் ஆத்திரத்தோடு தன் இடத்தில் போய்ப் படுத்துக்கொண்டான். மணியும் முன்போல் மௌனமாகி, தன்னிடத்தில் படுத்துக்கொண்டான். மெதுவாகக் கையில் கிடைத்த பர்ஸை சத்தப் படுத்தாமல் டிராயர் பைக்குள் போட்டுக்கொண்டான். அவன் மனசினுள் ஏதோ ஒரு பெரிய போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

* * *

நீட்ட நடு நிசி. மணி தன் பெஞ்சில் திறந்த வாய் திறந்தபடி தூங்கிக்கொண்டிருந்தான். மெல்ல அவன் படுக்கைக்கருகே ஓர் உருவம் அடி மேல் அடி எடுத்து வைத்து வந்தது. அது கங்கன்தான் என்பதைச் சொல்லவேண்டுமா, என்ன? அவன் கொஞ்சங்கூடக் கண் கொட்டவேயில்லை. அவன் மனத்திலும் பெரிய சர்ச்சைதான் நடந்துகொண்டிருந்தது. 'இவ்வளவூண்டுப் பயல் நம்பளுக்கே காது குத்தப் பாக்கிறானே! நிச்சயம் அவன் கையில் பர்ஸ்தான் கிடைத்திருக்கிறது. இல்லாவிட்டால் இவ்வளவு திமிராகப் பேசியிருக்க மாட்டான்!' என்று யோசித்துக் கொண்டே படுத்திருந்தான்.

வெகுநேரம் வரையில் பேசாமல் படுத்திருந்தவன், மணி தூங்கிவிட்டானா என்று பார்ப்பதற்காக மெதுவாகப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். ''டேய் மணி, என்னை மன்னிச்சுடுடா! நான் தெரியாமல் உன்னைக் கஷ்டப் படுத்திவிட்டேண்டா!'' என்று சொல்லிப் பார்த்தான்.

மணிதான் நன்றாகத் தூங்கிப் போய்விட்டானே! பசி மயக்கம், கால் வலி இரண்டும் சேர்ந்து அவனை அடித்துப் போட்டது போலிருந்தது. கங்கனுக்கு அவன் அயர்ந்து தூங்குகிறான் என்பது நிச்சயமாகிவிட்டது. அதற்குப் பிறகுதான் மெல்ல எழுந்தான். மணியின் கையை மெதுவாகத் தொட்டான். அப்படியே நடுவில் மணி விழித்துக்கொண்டால் பதில் சொல்லப் பல விடைகளைத் தயார்ப் படுத்திக்கொண்டான். மணியோ விழித்துக்கொள்வதாக இல்லை. கங்கனுக்கும் மணிபர்ஸைத் தேடி எடுக்க அதிக நேரமாகவில்லை. எடுத்த பர்ஸை சட்டைக்குள் வைத்துக்கொண்டு, கம்பிக் கதவு வழியே ஏறிக் குதித்து வெளியேறவும் அவனுக்கு அதிக நேரமாகவில்லை.

''பயலே ஓட்டாஞ்சல்லியா இது? பட்டினியோடு நாளைக்கும் கிடந்து திண்டாடு!'' என்று சொல்லிக் கொண்டே கங்கன் நீட்டினான் கம்பி.

(தொடரும்)

குருடனின் கதை

கே. கே. கோமளா

எங்கே பார்த்தாலும் ஒரே புதர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை செங்குத்தான பாறைகளே காணப்பட்டன. பெரிய பெரிய மரங்கள் அவற்றைப் பிளந்து கொண்டு வளர்ந்திருந்தன. அந்த இடத்தில் இருள் கவிந்துகொண்டிருந்தது.

முகுந்தன் மனத்திலும் இருள் -பயம் என்னும் இருள் - கவிந்து கொண்டிருந்தது. "கடவுளே! நீ தான் எனக்குத் துணை" என்று வேண்டியவாறு கால் போனபடி நடந்தான் முகுந்தன். போகப் போக இன்னமும் பயங்கரமான இடங்களே எதிர்ப்பட்டன.

'சரி, நாம் இங்கேயே அலைந்து மடிய வேண்டியதுதான். ஐயோ! அம்மாவும் அப்பாவும் நம்மை எவ்வளவு அன்பாக வளர்த்தனர். இப்படி அநாதையாக மடியத்தானா, இந்த மலைக்கு வந்தேன்? கடவுளே!' என்றெல்லாம் பிதற்றியவாறு அங்கிருந்த பெரும் பாறையொன்றில் அமர்ந்தான்.

அப்பொழுது எங்கிருந்தோ குழலோசை காற்றில் மிதந்து வந்தது. துள்ளி எழுந்தான். ஓசை வரும் திசையை நோக்கி நடந்தான். வரவர ஓசை அருகில் கேட்க ஆரம்பித்தது.

அங்கே ஒரு பாறையில் முகுந்தனைவிட நான்கைந்து வயது அதிகம் மதிப்பிடத் தக்க ஒரு சிறுவன் உட்கார்ந்து குழல் இசைத்துக் கொண்டிருந்தான்.

முகுந்தன் சப்தம் செய்யாமல் அவன் அருகில் சென்று உட்கார்ந்து கொண்டான்.

பாடி முடித்ததும் அச்சிறுவன் அப்படியே கண்களை மூடியவாறு உட்கார்ந்திருந்தான்.

"தம்பீ!" என்று மெல்லக் குரல் கொடுத்தான் முகுந்தன்.

"யாரது?" என்று ஆச்சரியத்துடன் வினவியவாறு அவன் முகுந்தன் பக்கம் திரும்பினான். அவன் கண்கள் மூடியபடியே இருந்தன. அவன் குருடனாயிருக்கலாம் என்று எண்ணினான் முகுந்தன்.

"ஐயோ, பாவம், எவ்வளவு நன்றாகக் குழல் ஊதுகிறான்! இவனுக்கா இப்பரிதாப நிலை!" என்று அவனுக்காக வருந்தியது முகுந்தனின் மனம்.

"யாரப்பா நீ? இங்கு எப்படி வந்தாய்?" என்று பரிவுடன் கேட்டான் அக்குருட்டுப் பையன்.

அப்பொழுதுதான் தன் நிலையை உணர்ந்தான். "நானும் எங்க அப்பாவும் இந்த மலையைச் சுற்றிப் பார்க்க வந்தோம். அப்பா அருவியில் ஸ்நானம் செய்துகொண்டிருக்கும்போது நான் ஒரு குரங்கைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தேன். வழி தவறி விட்டது" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறி முடித்தான் முகுந்தன்.

"அப்படியா? பாவம்! எனக்குக் கோவிலுக்குப் போக வழி தெரியும். அங்கு உன்னைக் கொண்டு போய் விட்டால் மேற்கொண்டு போக வழி தெரியுமா?" என்றான் அச்சிறுவன்.

"கோவிலுக்குப் பக்கத்தில்தான் நாங்கள் தங்கியிருக்கிறோம். அது இருக்கட்டும், ஏன் தனியாக இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? உன் வீடு எங்கே?"

"என்னைப் பற்றி ஏன் தம்பி இவ்வளவு அக்கறையாக விசாரிக்கிறாய்? செய்யத் தகாத ஒன்றைச் செய்துவிட்டு இங்கு ஒளிந்து வாழும் ஒரு துரோகி நான். அவ்வளவே. நீ இவ்வளவு அன்போடு கேட்பதால் கூறுகிறேன். என் கதையைக் கேட்டபிறகு நீயே என்னைத் தூற்றுவாய், பார்" என்ற

அச்சிறுவன் தன் கதையைக் கூறத் தொடங்கினுன்:

நான் பிறவிக் குருடனல்ல. நான் செய்த வினையே என்னைக் குருடனுக்கியது. நான் சுகபோக செல்வத்தில் வளர்ந்தவன்தான். எனக்கு ஒரே ஒரு தம்பி. நான் என் தம்பிமீது அளவற்ற பிரேமை வைத்திருந்தேன். அவனும் என் மீது உயிரையே வைத்திருந்தான்.

நாங்கள் இருவரும் எங்கள் பெற்ருேருக்குச் செல்லப் பிள்ளைகளாதலால் நாங்கள் எதை விரும்பினுலும் அதை எங்கள் தந்தை உடனே நிறைவேற்றி விடுவார். எனக்கு எப்பொழுதுமே குழலூதுவதில் விருப்பம் அதிகம். ஆகவே நான் ஒரு வித்வானிடம் பயிற்சி பெற்று வந்தேன். என் தம்பிக்குச் சித்திரக் கலையில் விருப்பம் அதிகம். ஆகவே அவன் அதில் பயிற்சி பெற்று வந்தான்.

நாங்கள் எப்பொழுதுமே பிரிய மாட்டோம்.

இப்படி இருக்கையில்தான் அந்தப் பாழாய்ப்போன செய்தியைக் கேட்க நேர்ந்தது.

நண்பன் ஒருவன் வீட்டிற்குப் போய்விட்டு வீட்டிற்குள் நுழைந்தேன். அடுத்த அறையில் அப்பா யாரோ ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதால் எனக்கு அவ்வளவாக ஒன்றும் புரியவில்லை. ஆயினும் ஒரு முக்கியமான விஷயத்தைப் புரிந்துகொண்டுவிட்டேன்.

நான் அவர்கள் சொந்த மகன் அல்லவென்றும், என்னை அவர்கள் அநாதை விடுதியிலிருந்து வாங்கி வளர்த்து வருவதாகவும் அறிந்துகொண்டேன். ஐயோ! அப்பொழுது என் மனம் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

'அவர்கள் என் சொந்தப் பெற்ருேர்கள் அல்ல. நான் அந்த வீட்டில் ஓர் அந்நியன்.' இந்த எண்ணம் என் மனத்தில் நன்கு ஊன்றி விட்டது.

'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல இதுவரை என்னிடம் அன்பாயிருந்த என் பெற்ருேர் இப்பொழுது வெறுப்பாயிருப்பதுபோல் எனக்குத் தோன்றலாயிற்று. உயிரைப் போல நேசித்து வந்த தம்

பியை விஷம் என வெறுக்கலானேன். அவன்மேல் எனக்கு என்னையறியாமலேயே பொறாமை ஏற்படலாயிற்று. அவனோடு முகம் கொடுத்தே பேசுவதில்லை. அவன் அன்போடு பேசவந்தாலும் அவன் மேல் எரிந்து விழுவேன்.

எனக்கு எல்லாரிடமும் வெறுப்பு ஏற்படலாயிற்று. எதிலும் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பித்தேன். என் ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் மறக்க எப்பொழுதும் குழலூதுவதிலேயே என் மனத்தைச் செலுத்த ஆரம்பித்தேன்.

அப்பொழுது பரீட்சை சமயம். ஒரு நாள் மாலை. தோட்டத்தில் உட்கார்ந்து குழலூதிக்கொண்டிருந்தேன். அப்பொழுது தம்பி வந்து, ''அப்பா உன்னைக் கூப்பிடுகிறார்'' என்றான். நான் வீட்டிற்குள் போனேன். அப்பா கோபமாகக் காணப்பட்டார். ''ஏண்டா! தடியா! எப்பப் பார்த்தாலும் குழலூதிக்கொண்டேயிருந்தால் படிப்பு என்ன ஆகிறது? இனி குழலைத் தொடு, சொல்லுகிறேன்!'' என்று கத்தியவாறு முதுகில் இரண்டறைகள் வைத்தார். என்றுமே அப்பாவிடம் அடியே வாங்கியறியாத எனக்கு - என் பேய் மனத்திற்கு - அன்றைச் சம்பவம் பெரிதும் துணையாயிருந்தது. மற்ற நாளாக இருந்தால் அதைச் சாதாரணமாகக் கருதியிருப்பேன். ஆனால் என் உடல் முழுதுமேதான் விஷம் பரவியிருக்கிறதே!

இனி இந்த வீட்டில் நமக்கு இடம் இல்லை. எங்கேனும் போய்விடுவதே நன்று என முடிவு கட்டினேன். கோள் சொல்லி எனக்கு அடிவாங்கி வைத்தது என் தம்பியே என்று உறுதியாக நம்பினேன். 'நான் போனபிறகு இவனுக்கு மட்டும் இந்த வீட்டில் என்ன உரிமை?'' என்ற கொடூர எண்ணம் எனக்குத் தோன்றிற்று.

மறுநாள் என் நண்பனொருவன் வீட்டிற்குப் போனேன். அவன் தந்தை ஒரு ரசாயன நிபுணர். அவனிடம், ''எங்கள் வீட்டில் எலி உபத்திரவம் அதிகமிருக்கிறது. எலி பாஷாணம் வேண்டும்'' என்றேன். முதலில் அவன் தயங்கினான். நான் மிகவும் வற்புறுத்தவே அவன் தந்தையின் அறைக்குள் சென்று

ஒரு சிறிய பொட்டலம் கொண்டு வந்து கொடுத்தான்.

அதை எடுத்துக்கொண்டு நேராக வீடு வந்து சேர்ந்தேன். தம்பியின் அறைக்குள் நுழைந்தேன். அங்கு அவன் இல்லை. மேஜைமேல் அவனுக்காக 'டம்ளர்'ரில் பால்வைக்கப் பட்டிருந்தது. நடுங்கும் கரங்களால் பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்த பொருளைப் பாலில் போட்டுவிட்டேன்.

என் அறைக்கு வந்து தாழ்ப்பாள் போட்டுக்கொண்ட பிறகுதான் எனக்குச் சுய உணர்ச்சி வந்தது. 'நான் செய்தது சரியா? அன்னமிட்ட வீட்டிலேயே கன்னமிடலாமா?' என்று ஒரு கணம் என் நல்ல மனம் சிந்தித்தது. ஆனால் பொறாமை உணர்ச்சி அதற்கு மேல் சிந்திக்கவே இடங்கொடுக்கவில்லை.

அசட்டுத் தைரியத்துடன் கையில் சேர்த்து வைத்திருந்த பணத்துடன் அன்றிரவே கிளம்பி விட்டேன். எங்கெங்கோ திரிந்து இறுதியில் இங்கு வந்து சேர்ந்தேன். இந்த இடத்தை நான் மிகவும் விரும்புகிறேன். அமைதி நிலவும் இந்த இடத்தில் உட்கார்ந்து யோசிக்க யோசிக்க, நான் செய்த வினையின் பயங்கர உருவம் தெரிகிறது. எங்கோ அநாதையாகக் கிடந்த என்னை அன்போடும் ஆதரவோடும் வளர்த்த என் அருமைப் பெற்றோருக்கு நான் செய்த கைம்மாற்றைப் பார்த்தாயா?

அதனால்தான் கடவுள் என் கண்களைப் பறித்துக்கொண்டுவிட்டார். ஆம்! மின்னலில் என் கண்களை இழந்தேன். அதற்காகக் கிஞ்சித்தும் நான் வருந்தவில்லை. நான் செய்த குற்றத்திற்கு - துரோகத்திற்கு - இந்தத் தண்டனை போதாதுதான்! இல்லையா?''

அவன் தன்வரலாற்றை ஒரு கேள்விக்குறியோடு கூறி முடித்தான்.

அவனுடைய கேள்விக்குப் பதில் கேள்வி போட்டான் முகுந்தன்.

''ஏன் தம்பீ! கதையை இன்னும் முடிக்கவில்லையே?''

''என்ன! கதையா?''

''உம்! இதுவரைதான் படித்தாயா? மேற்கொண்டு படிக்கவில்லையா?'' என்றான் முகுந்தன்.

''படித்தேனா?....''

''ஏன் தம்பீ! இன்னும் மறைக்கப் பார்க்கிறாய்? உண்மையை ஒப்புக்கொண்டுவிடுவதுதான் நல்லது. அது போகட்டும். இன்னும் ஏன் உன் கண்களை மூடியபடியே இருக்கிறாய்? திறந்து விடலாமே!'' என்றான் முகுந்தன்.

''ஆ!'' என்று கூவினான் அவன். அதன் எதிரொலி அடங்கச் சிறிது நேரம் பிடித்தது.

பிறகு அவன் தன் கண்களை மெதுவாகத் திறந்தபடி எதிரே நின்றுகொண்டிருந்த முகுந்தனை நோக்கினான். முகுந்தன் வெற்றி வீரனைப் புன்முறுவலுடன் நின்றுகொண்டிருந்ததை அந்த இருளிலும் தெளிவாகப் பார்க்க முடிந்தது அவனால்.

உடனே அவன் முகுந்தனின் கரங்களைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு, ''தம்பீ! என்னை மன்னித்து விடு. என்னையும் என்னை நம்பியிருக்கும் இன்னும் மூன்று ஜீவன்களையும் காப்பாற்ற வேண்டி இப்படி ஆரம்பித்தேன். இக்கதையைக் கேட்பவர்கள் நான் ஒரு குருடன் என்றே நம்பி அநுதாபப்படுவார்கள். நிறையப் பணமும் கிடைக்கும். அதையேதான் உன்னிடமும் கூறினேன். ஆனால் நீ அதை எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''அந்தக் கதை நான் எழுதியதுதான். அது ஒரு பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அதனால்தான் உன் குட்டு உடனே வெளிப்பட்டது. தம்பீ! உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பரிதாபமாகவே தோன்றுகிறது. உன்னைப் பற்றி நான் ஏதும் தவறாகவே கருதவில்லை. வயிற்றுக்கொடுமையைத் தாங்கமாட்டாமல்தானே இவ்விதம் முறையற்ற வழியில் இறங்கினாய்! எங்கள்கூட சென்னைக்கு வந்துவிடு. ஏன் யோசிக்கிறாய்? உன் குடும்பத்துடன்தான். அப்பாவிடம் கூறி எங்கள் தொழிற்சாலையில் உனக்கு ஒரு வேலை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன். நீயும் நியாய வழியில் உன் குடும்பத்தைக் காக்கலாம். உம்! என்ன?''

நன்றிப் பெருக்கினால் அவன் கண்களில் நீர் நிறைந்தது.

மகள் கிடைத்தாள்

'தமிழ்க்குமரன்'

கான்ஸ்டபிள் கனகன் காலேஜ் ரோடு பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். அவனது முகத்திலே சோகத்திரை படர்ந்திருந்தது. காரணம்: "இன்று காலை பத்து மணிக்கு சூப்பரின்டென்ட் சுந்தரம் வருகிறார். அவர் கண்டிப்பான பேர்வழி. ஒரு கேஸ்கூட கொண்டு வராத நீ எப்படியாவது ஒரு கேஸ் கொண்டு வந்து விட வேண்டும்" என்ற சப் இன்ஸ்பெக்டரின் உத்தரவுதான்.

"டிரிங்..டிரிங்..டிரிங்" என்ற சைக்கிள் மணிச் சத்தம் கேட்டுத் திரும்பினான். சைக்கிளில் ஒரு பையன் தன் தங்கையையும் வைத்துக்கொண்டு வந்தான்.

அதைப் பார்த்ததும் அவன் மனத் திரையில் வேறு ஒரு காட்சி தோன்றி மறைந்தது, அப்போது—

கனகனுக்கு வயது பதினுன்கு. அவனும் தங்கை கண்ணகியும் இருவரும் உயர்நிலைப் பள்ளியில் மூன்ருவது படிவம் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் இருவரும் பள்ளிக்கூடம் செல்லத் தாமதமாகி விட்டது. கனகன் தன் மாமாவினுடைய சைக்கிளில் கண்ணகியுடன் பள்ளிக்கூடத்தை நோக்கிப் பறந்தான். அப்போது பாழாய்ப் போன போலீஸ்காரன் ஒருவன் இதைக் கண்டுவிட்டான். அவ்வளவுதான் - உடனே விசில்

பூகோள வாத்தியார்: டேய் ராமு, லண்டனுக்கு இந்தியாவிலிருந்து செல்லும் விமானம் எந்த மார்க்கமாகச் செல்லுகிறது?

ராமு: ஆகாய மார்க்கமாக, ஸார்!

எடுத்து ஊதினான். சிவப்புத் தொப்பியையும் அவன் ஊதிய விசில் சத்தத்தையும் கேட்ட கனகனுடைய மனம் பதறியது; தேகம் பயத்தால் நடுங்கியது. கைப்பிடி நழுவியது. அதனால் சைக்கிள் வண்டி சரக்கென்று சிமெண்ட் ரோட்டில் வழுக்கியது. கனகன் பக்கத்திலிருந்த பிளாட்பாரத்தில் மோதினான். நெற்றியில் சரியான அடி; ரத்தம் குபுகுபுவென்று பாய்ந்துகொண்டிருந்தது. நடுரோட்டில் கண்ணகியும் விழுந்து கிடந்தாள். சைக்கிள் மேலே விழுந்ததில் அவளுக்குக் காலில் சரியான அடி. இருவரும் ஆம்புலன்ஸ் கார் மூலம் சர்க்கார் ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டனர்.

அதே கனகன்தான் இப்போது சைக்கிளில் வேகமாக வந்துகொண்டிருக்கும் பையனையும் சிறுமியையும் கண்டதும் தனது பழைய மண்டைக் காயத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டான். ஆனால், ''பத்து மணிக்குள் ஏதாவது ஒரு கேஸ் கொண்டு செல்ல வேண்டுமே. அதற்காக இரு இளம் நெஞ்சுகளைக் கஷ்டப்படுத்த வேண்டுமா?'' என்று எண்ணியது அவனது மனம்.

அதே சமயம் வயிற்றுப் பிழைப்பு அவனை வற்புறுத்தியது, கை தானாக விசிலை எடுத்தது; ''வீல்'' என்று ஊதியது. அவ்வளவுதான். கனகன் இரு கண்களையும் மூடிக்கொண்டான், அவர்கள் கீழே விழுவதைக் கண்டு காணச் சகியாமல். ஆனால், சைக்கிள் ''கிரீச்'' என்ற பிரேக் சத்தத்துடன் நின்றது. பின்னால் இருந்த சிறுமியும் கீழே குதித்தாள். சைக்கிளை ஓட்டி வந்த பையனும் பயப்படாமல் இறங்கி, நின்றுகொண்டிருந்தான்.

கனகன் அருகில் சென்று குரலைத் தாழ்த்திக்கொண்டு மெதுவாக, ''தம்பி! நான் இன்று எப்படியாவது ஒரு கேஸ் கொண்டு செல்லவேண்டும். நீ கவலைப்படாமல் வா. உன்னுடைய அபராதத் தொகையை நானே செலுத்தி விடுகிறேன்'' என்றான். அந்தப் பையன் மனசுக்குள் சிரித்துக்கொண்டான். கனகன் போலீஸ் ஸ்டேஷனுள் இருவரையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். அங்கே சூப்பரின்டென்ட் சுந்தரமும் சப்-இன்ஸ்பெக்டர் சந்தானமும் பேசிக்கொண்டிருந்தனர்.

''ஸார்! இருவரும் ஒரே சைக்கிளில் டபிள்ஸ் சென்றார்கள்'' என்றான் கனகன்.

சப்-இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து பார்த்தார். அங்கே தமது பையன் குமாரும் வளர்ப்புப் பெண் பவானியும் நிற்பதைக் கண்டார்!

''ஏண்டா, டபிள்ஸ் போனாய்?'' என்றார்.

''பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டது. அதனாலேதான் அப்பா'' என்றான் குமார்.

பையன் சப்-இன்ஸ்பெக்டர் மகன் போலிருக்கிறதே என்று எண்ணிப் பயந்தான் கனகன்.

''இவர்கள் இருவரும் உங்கள் குழந்தைகள்தானா?'' என்றார் சுந்தரம்.

''ஆமாம் ஸார்'' என்றார் சந்தானம்.

''இந்தப் பெண்ணைப் போல எனக்கும் ஒரு குழந்தை உண்டு'' என்று பேச்சை ஆரம்பித்தார் சுந்தரம். ''இந்தப் பையன் மட்டும்தான் என் பிள்ளை. அந்தப் பெண் ஒரு சமயம் திருவண்ணாமலை திருவிழா நடந்தபோது கிடைத்தாள். எனக்குப் பெண் குழந்தை இல்லாததனாலே நான் அவளை வளர்த்து வருகிறேன்'' என்றார் சந்தானம்.

''என்ன! திருவண்ணாமலையிலேயா கிடைத்தாள்?''

''ஆமாம்.''

சூப்பரின்டென்ட் அப்பெண்ணின் கால்களைக் கூர்ந்து கவனித்தார். உடனேயே, ''ரேவதி!'' என்று கூறிக்கொண்டே அவளைக் கட்டியணைத்துக் கொண்டார். சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு சூப்பரின்டென்ட், ''ஸார்! இவள்தான் என் பெண். சில வருஷங்களுக்குமுன் திருவண்ணாமலையில் நான் முகாம் செய்தபோது காணாமல் போனவள். கதவில் அகப்பட்டு இவளது காலிலே ஒரு விரல் நசுங்கிவிட்டது. நான்கு விரல்கள்தான் என் மகளுக்கு உண்டு. இதை வைத்துத்தான் இவளை இப்போது அடையாளம் கண்டுபிடித்தேன்'' என்றார்.

''இவன் கேஸ் பிடிக்கப் போய்த்தான் உங்கள் பெண் கிடைத்தாள்'' என்றார் சப்-இன்ஸபெக்டர் சந்தோஷத்தோடு.

மறு வாரமே சுந்தரம் தம் மகளைத் தேடித் தந்த கனகத்தை ஹெட்கான்ஸ்டபிள் பதவிக்கு உயர்த்தினார்.

வானவில்

ச. கு. கணபதி ஐயர்

1. மழைக்கால மாலையிலே மகிழ்ச்சிகொண்டேநான்
மப்புமந் தாரமான வானம்நோக்கினேன்
இழைக்கும் தரமுமில்லை ஏழுவர்ணத்தில்
இணையற்ற வில்லொன்றென் கண்ணிற்பட்டது.

2. வடதிசையும் தென்திசையும் இரண்டுநுனிகள்
வாகாகக் கீழ்த்திசையில் வளைவின்சிகரமே
படந்தீட்டி னாருண்டோ வானகத்திலே
பிரமைதானோ யான்காணும் காட்சி யென்றிட்டேன்

3. செக்கச் சிவந்தநிறம் மேற்புறத்திலே
தெளிவான ஊதாநிறம் கீழ்ப்புறத்திலே
தக்க நிறங்கள்பிற இடையிலுமாகத்
தான்அந்த வானத்துக்கோர் சோபைதந்தது.

4. விண்ணுலக வேந்தனிட்ட வில்லிதுதானோ
விண்ணையலங் காரம்செய்யும் விசித்திரமாலையோ
வண்ணக் கதிரவன்றன் கிரணக்கைகளால்
வண்ணங்களை வாரிப்பூசி வரைந்தவட்டமோ?

5. வில்லென்று சொன்னாலதில் நாணொன்றுமில்லை,
விசைக்கின்ற அம்புமில்லை, வீரனுமில்லை;
கொல்லும் குணமுமில்லை கோபமுமில்லை
கொள்ளையழகு குதிகொளின்பக் குளிர்ந்தவானத்தில்:

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

கே. எஸ். குனுக்கன்,
காட்டுப்புத்தூர்.

வருங் காலத்தில் மனிதனுக்கு அவசியமானது எது?

இது ஒரு பரந்த கேள்வி. குறிப்பாக என்ன விடை சொன்னாலும் அதில் குற்றம் கண்டுபிடிக்க முடியும்.

மனித உடலுக்கு இக்காலத்தில் போலவே எல்லாக் காலங்களிலும் ஊண், உடை, உறைவிடம் என்பவை அவசியமானவை. மற்றப்படி முயற்சியும் ஓய்வும் அவசியமானவை. அறிவுக்குக் கல்வியும், சிந்தனையும் அவசியமானவை. மனத்துக்கு அன்பு, அமைதி முதலிய சிலவற்றை ஒருவாறு அவசியமானவை என்று சொல்லலாம். நான் மேலே குறிப்பிட்டவைகளை நன்கு நிறைவேற்றித் தரக் கூடிய சாதனங்களையும், உபகரணங்களையும், கருவிகளையுங்கூட அவசியமானவை என்று ஓரளவில் சொல்லக் கூடும், அல்லவா?

பா. ரத்தினசபாபதி,
பருத்தித்துறை.

தொட்டாற் சிணுங்கிச் செடியைத் தொட்டேன். இலை சுருங்கிக்கொண்டது. ஏன்?

இது ஒரு தற்காப்பு முறை. மரவட்டைகளைத் தொட்டால் அவை சுருண்டு கொள்கின்றன. முள்ளம்பன்றியைத் தொட்டால் அது பந்துபோல் சுருண்டு கொள்கிறது. இவை இரண்டும் தம் உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தப் பிராணிகள் செய்யும் காரியங்கள். மேலும் பல பிராணிகள் உறங்கும்போதும் இவ்வாறே சுருண்டு படுத்து உறங்குகின்றன.

இவைகளைப் போன்ற நிகழ்ச்சிகள் தாவர உலகத்திலும் நடக்கின்றன. அவரை முதலிய கொடிகளும், சில மரங்களும் இரவில் தங்கள் இலைகளைத் தொங்கவிட்டு உறங்குகின்றன. இரவில் பனி பெய்து இலைகளின் மீது படிந்தால் அவற்றிலிருந்து நீராவிப் போக்கு (Transpiration) அவ்வளவு நிகழாது. அது நிகழாவிட்டால் செடியின் வாழ்க்கைக் காரியங்கள் சீராக நடக்கமாட்டா. தொட்டாற் சிணுங்கிச் செடி இரவில் தூங்கும் செடி வகைகளில் ஒன்று.

மேலும், இதற்கு இன்னும் ஒரு தற்காப்புக் காரணமும் சொல்லப்படுகிறது. செடிகளை மேய்ந்து வாழும் பிராணிகள் பல செடிகளின் தழைகளைத் தின்று செடிகளை அழித்து விடுகின்றன. தொட்டாற் சிணுங்கிச் செடிகள் முளைத்துக் கிடக்கும் இடங்களில் அருகில் அவ்வகைப் பிராணிகளின் காலடி பட்டாலும், அல்லது அவை அச்செடிகளைத் தின்னும் பொருட்டுத் தொட்டாலும் உடனே இலைகள் சுருங்கிக் குச்சிகுச்சியாகத் தோன்றுகின்றன. கானல் நீரால் ஏமாந்த பிரயாணியைப் போல் அந்தப் பிராணி ஏமாற்றம் அடைகிறது. இலை என்று நினைத்தது குச்சி என்று கண்டு ஒதுங்கிப் போகிறது. மேலும் இப்படிச் சுருங்கியதும் அந்தச் செடியின் தண்டுகளில் (Stems) வளைமுட்கள் (Spines) இருக்கின்றன. வாயை வைத்தால் அவை நறுக்கென்று குத்துகின்றன.

செடிக்கும் நமக்கும் அதைத் தின்னும் பிராணிக்கும் வித்தியாசம் தெரியாது. ஆகையால் நாம் தொட்டாலும் செடி சுருங்கிக் கொள்கிறது.

செடிக்கு உயிரும் உணர்ச்சியும் இருப்பதே இவ்வகையான செயலுக்குக் காரணம்.

எஸ். ஸ்ரீநிவாஸன், கோடம்
பாக்கம், சென்னை.

கழுகிற்கு அதிக தூரத்திற்கு அப்பால் உள்ள பொருள்கள் சட்

டென்று புலப்படும். ஆனால் அருகி லுள்ள பொருள்கள் நன்றாய்த் தெரியாது என்கிறார்களே, அது உண்மையா?

இல்லை. கழுகுகளின் கண்கள் விசித்திரமானவை. நெடுந் தூரத்தி லுள்ள பொருள்களும் அருகிலுள்ள பொருள்களும் கழுகின் கண் களுக்கு நன்றாகத் தெரியும்.

கழுகு இனத்தைச் சார்ந்த பற வைகள் எல்லாவற்றிற்கும் கண்கள் மிக முக்கியமான உறுப்புக்கள். ஆகையால்தான் அவைகள் தங்க ளுடைய இரையைப் பற்றுவதற்கும் கொல்லுவதற்கும் கூரிய நகங்களை உடைய கால்களை உபயோகிக்கின் றன. இரையைக் கொன்ற பின், அதைக் கிழிப்பதற்குத் தங்கள் வலிய அலகுகளை உபயோகிக்கின் றன. இரையைக் கொல்வதற்கு அலகுகளை உபயோகித்தால், கொல்லப்படும் பிராணி உயிர் தப்ப முயலும்போது கழுகின் கண்கள் காயமடையக்கூடும், அல்லவா?

சுவாமிபாலு, எல். எம். ஸி. ஹைஸ்கூல்.

மலைகள் வளரும் என்கிறார் களே, அது உண்மையா? காரணம் என்ன?

சில மலைகள் வளர்ந்து உயர் கின்றன; சில மலைகள் தகர்ந்து தாழ்கின்றன. இமயமலை இவ்வாறு உயர்ந்துவரும் மலைகளில் ஒன்று. மத்திய ஆசிய மலைத் தொடரும் அப்படியே.

பூமி என்பது முழுவதும் கட்டி யான பொருள் அன்று. மேலே ஓடு போன்ற கட்டிப் பொருள் இருக் கிறது. அது உருகிய கற்குழம்பின் மீது மிதக்கிறது. அதற்கும் அடி யில் கட்டியான மையம் இருக் கிறது.

கற்குழம்பு மிகவும் உஷ்ண நிலை யில் இருக்கிறது. அந்த உஷ்ணத் துக்குப் பெரும்பான்மையும் ரேடியோ-ஆக்டிவிடி (Radio Activity) என்று சொல்லப்படும் ரேடி யக் கிளர்ச்சியே காரணம். இதனால் உஷ்ணம் மிகுதிப்படும்போது கற் குழம்பு அளவில் பெரிதாகிறது. அப்போது பூமியின் மேலோடு அழுத்தப்படுகிறது. அந்த அழுத் தம் அதை இருபுறமும் நசுக்குவ தால், அது பிதுங்கி உயர்கிறது. இதை மலையின் வளர்ச்சி என்று ஒருவாறு சொல்லலாம்.

ஜெ. வைத்தியநாதன், பாலக்கரை, திருச்சி.

கடலில் கப்பல் ஆதாரமின்றி தண்ணீரில் செல்லுகிறதா? அல்லது இதற்குக் கடலின் அடியில் ரெயி லுக்குத் தண்டவாளம் இருப்பது போல் ஏதாவது இருக்கிறதா?

கப்பல் கடலில் மிதந்து செல்லு கிறது. அதற்கு அடியில் தண்டவா ளமோ பாதையோ கிடையாது. அது கடலில் செல்வதை, நாம் நீரில் நீந்திச் செல்வதோடு ஒப்பிடவேண் டுமே தவிர, நாம் தெருவில் நடப்ப தோடு ஒப்பிடக்கூடாது. வானத் தில் பறக்கும் ஆகாயவிமானம் காற் றில் செல்வதைக் கவனித்தால் தண்டவாளமோ பாதையோ வேண்டியதில்லை என்பது தெளி வாகத் தெரியும்.

ஆர். துவாரகநாத், பங்களூர்.

சூரியனை எதிரில் பார்த்தால் கண் கூசுகிறது. ஆனால், கூலிங் கிளாஸில் பார்த்தால், கண் கூசுவ தில்லை, சூரியனைக் கூலிங்கிளாஸில் பார்க்கும்போது, கண் கூசாம லிருக்க, அதில் என்ன என்ன பொருள்கள் கலந்திருக்கின்றன?

சூரியனுடைய கிரணங்கள் ஒளி வீசுகின்றன. வெப்பத்தையும் வீசு கின்றன. அதாவது அவை ஒளிச் சக்தியையும், வெப்ப சக்தியையும் சுமந்து செல்கின்றன. அதிகமான ஒளியும் வெப்பமும் கண்ணுக்குக் கெடுதல் செய்யக்கூடும். ஒளிச் சக்தி மட்டுக்கு மிஞ்சி இருக்கு

மானுல், கண்ணின் ஒளித் திரையில் அந்தப் பிரகாசமான ஒளி பட்டவுடன், கண் கூசுகிறது. சட்டென்று கண் மூடிக்கொள்கிறது. இது இயற்கையாக நாம் பரம்பரையில் பெற்ற ஒரு தற்காப்புக் குணம். உஷ்ணமான பொருளின் மீது கை பட்டால் நம்மையறியாமலே சட்டென்று கையை எடுப்பது போலவே, இதுவும் ஓர் அணிச்சைச் செயல்.

'கூலிங்கிளாஸ்' என்று சொல்லப் படும் கருப்புக் கண்ணுடியை அணிந்தால், அந்த நிறக் கண்ணுடி வெப்ப சக்தியிலும், ஒளிச் சக்தியிலும் பெரும்பான்மையை உட்கிரகித்து விடுகிறது. ஆகையால் அந்தக் கண்ணுடியைக் கடந்து நம் கண்ணில் படும் வெப்பமும் ஒளியும் குறைவாக (மட்டுக்கு மிஞ்சி இல்லாமல்) படுகின்றன. ஆகையால் அந்த ஒளியாலும், வெப்பத்தாலும், கண் கெடுவதும் இல்லை; கூசுவதும் இல்லை.

இவ்வகையான குளிர்ச்சியான கண்ணுடிகளைச் செய்வதற்கு வேண்டிய அளவில் உலோக உப்புக்கள் உருகிய கண்ணுடிப் பொருளில் கலக்கப்படுகின்றன. அப்படிக் கலந்தபோது, அந்த உப்புக்களால் கண்ணுடிக்கு நிறம் உண்டாகிறது. வெப்பக் கிரணங்களில் பெரும்பான்மையைக் கண்ணுடி உட்கிரகிக்கிறது என்றும், ஒளிக் கிரணங்களில் பெரும்பான்மையைக் கண்ணுடியுடன் கலக்கும் பொருளால் ஏற்பட்ட நிறம் உட்கிரகிக்கிறது என்றும் சொல்லலாம்.

ஆர். கண்ணன், மதுரை.

விமானம் வானத்தில் பறந்து செல்லுகையில், பூமியின் ஆகர்ஷண சக்தியால், இழுக்கப்பட்டு கீழே விழவில்லையே, ஏன்?

எஸ். பார்த்தசாரதி, தரம்பேட், நாகபுரி.

ஆகாய விமானம் எவ்விதம் பறக்கிறது? இவை இரண்டிற்கும் விடை ஒன்றுதான்.

ஓர் ஏரோப்ளேன் (ஆகாய விமானம்) காற்றின் ஊடாக விரைவாகச் செல்லும்போது, அதன் இறக்கைகளின்மீது வாயு அழுத்தம் செலுத்தப்படுகிறது. அந்த இறக்கை சற்றே சாய்வாக வைத்திருப்பதால், இந்த அழுத்தத்தின் ஒரு பகுதி நேராக (செங்குத்தாக) உயர நோக்கிச் செயல்புரிகிறது.

இப்படி மேல் நோக்கிச் செலுத்தப்படும் அழுத்தமே ஏரோப்ளேனைத் தாங்கிப் பிடிக்கிறது; பூமியின் ஆகர்ஷண சக்தியால் அது கவரப்பட்டுக் கீழே விழாமல் தடுக்கிறது. ஏரோப்ளேன் எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாகச் செல்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இந்த விசையும் மேல் நோக்கி அதிகமாகச் செலுத்தப்படும். ஏரோப்ளேன் மெதுவாகப் பறந்தால். சில வேளைகளில் இந்தச் சக்தி அதைத் தாங்குவதற்குப் போதிய வலிமை உடையதாக இராது. ஆகையால் ஏரோப்ளேன் ஓரளவு வேகத்துக்குக் குறையாமல் சென்ருக வேண்டும். அப்படிச் சென்ருல்தான், ஏரோப்ளேன் ஆகாயத்தில் பறக்க முடியும்.

எஸ். பார்வதி, மலேயா.

நமது வாழ்க்கைக்கு விஞ்ஞானம் அவசியம்தானு?

இந்தக் கேள்வி முன்னுல் ஒரு முறை சற்றே வேறு வடிவத்தில் கேட்கப்பட்டது.

நம்முடைய வாழ்க்கையில் இப்போது ஒவ்வொரு பகுதியிலும் விஞ்ஞானம் நெருங்கிப் பின்னிக் கிடக்கிறது. அறிவோடு நல்வாழ்வு புரிவதற்கு விஞ்ஞானம் மிகவும் உற்ற துணை; அவசியமும் கூட:

தண்டனை

சம்பந்தம்

சாப்பாட்டு வேளையின்போது தான் அந்த ஊருக்கு ஒரு ரெயில் வந்துகொண்டிருந்தது. அதோடு மட்டுமா? எதிர்த்தாற் போல் வந்த மற்றொரு ரெயிலோடு சந்திப்பு வேறு.

அப்போழுது பாயிண்ட்ஸ்மேன் பக்கிரி அந்த வேகாத வெயிலில் தலைப் பாயிண்டில் கொடியும் கையுமாய் நின்றுகொண்டிருந்தான். நல்ல பசி. அவன் பையன் பழனி சோற்று மூட்டையுடன் அங்கு வந்து நின்றதைக் கண்டதும் பக்கிரிக்கு இன்னும் பசி அதிகமாயிற்று. உடனே கையிலிருந்த கொடியை அங்கேயே போட்டுவிட்டு, சோற்று மூட்டையை அவிழ்த்துக்கொண்டே பக்கத்து மரத்து நிழலுக்கு ஓடினான். பெரிய பெரிய கவளமாய் உருட்டி வாயில் போட்டுக் கொண்டான். அதற்குள் கன வேகமாய் வந்த முதல் வண்டி, கட கடவென்று பிளாட்பாரம் சென்று நின்றது. பாவம்! அந்த ரெயிலில் கடைசிப் பெட்டியில் ஆபீசர் இருந்ததைப் பக்கிரி பார்க்கவேயில்லை.

உடனே பிளாட்பாரத்திலிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் 'உயிங்-உயிங்' என்று விசில் அடிக்க ஆரம்பித்துவிட்டார். மற்றொரு வண்டிக்குப் பாயிண்டை அடுத்த லயனுக்கு மாற்றிப் போட்டாக வேண்டுமல்லவா! பக்கிரிதான் அப்பொழுது அவசர அவசரமாய் வாய்க்கும் கைக்கும் சண்டை போட்டுக்கொண்டிருந்தானே! உடனே தன் பையனைக் கூப்பிட்டு, "டேய், பாயிண்டை அந்த லயனுக்குத் திருப்பிப் போடுடா" என்றான். பழனிதான் எப்போது எப்போது என்று காத்துக்கொண்டிருந்தானே! தினம் இதையெல்லாம் பார்த்துப் பழக்கப் பட்டவன் தானே பழனி! 'டக்'கெனப் பாயிண்டைத் திருப்பிப் போட்டுவிட்டுப் பச்சைக் கொடியை எடுத்து ஆட்டி ஸ்டேஷன் மாஸ்டருக்கு 'ரைட்'கூடக் கொடுத்தான்.

இதையனைத்தும் கடைசிப் பெட்டிலிருந்த ஆபீஸர் தம் கழுகுக் கண்களால் பார்த்துக்கொண்டேயிருந்தார். உடனே வண்டியை விட்டிறங்கி விடுவிடென்று அந்தப் பாயிண்டை நோக்கி வந்தார். அதற்குள் அவர் முகம் சிவந்துவிட்டது. அவரை அங்கே பார்த்ததும் பக்கிரிக்கு உதறல் ஏற்பட்டுவிட்டது. கையை உதறிக்கொண்டே ஓடி வந்தான்; வணக்கமும் செலுத்தினான். "என்னடா செய்றே நீ? யார் இந்த பையன்?" என்று கர்ஜித்தார். "நம்ப பையன் தானுங்க. நான் சாப்பிட்டுக்கிட்டு இருந்தேன்" என்று தாழ்மையுடன் சொன்னான்.

"அதற்காக உன் பையனை விட்டுப் பாயிண்ட் அடிக்கச் சொல்லி வண்டியைக் கவிழ்க்கப் பார்க்கிறாயா?"

"சார், சார், இதோ பாருங்க; அவனுக்கு நன்றாய்ப் பாயிண்ட்டு அடிக்கத் தெரியும் சார், எச்சல் கையா யிருந்ததே என்று......"

"ஷட் அப். அந்தச் சோற்றை அப்புறம் கொட்டிக் கொண்டால்! உன்னைத் தொலைச்சுக் கட்டுகிறேன் பார்."

அதற்குள் எதிர் வண்டி வந்துவிடவே 'விர்' ரெனத் திரும்பித் தம் பெட்டிக்குப் போய்விட்டார் ஆபீசர். பக்கிரிக்குப் பகீர் என்றது. 'வம்பெல்லாம் இவனாலே வந்தது' என்று தன் வயிற்றில் அடித்துக் கொண்டான். பழனி தலைக்குயர்ந்த பையனாயிற்றே. விஷயம் விளங்க எத்தனை நாழியாகும்! 'அடடா! நான்தான் எனக்குப் பாயிண்டு அடிக்கத் தெரியாது என்று சொல்லித் தொலைத்திருக்கக்

கூடாதா?' என்று எண்ணி வருந்தினான். அதற்கப்புறம் அப்பாவிடம் ஒன்றுமே பேசவில்லை அவன். காலிப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சந்தடி செய்யாது வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

வண்டிகள் இரண்டும் சென்ற பிறகு, ஸ்டேஷனுக்கு வந்தான் பக்கிரி. நடந்ததை ஸ்டேஷன் மாஸ்டரிடம் சொன்னான். ''அடடா! அந்த ஆபீஸர் ரொம்பவும் கறார் பேர்வழியாயிற்றே! அவர் கண்ணிலே பட்டாயே நீ! இத்தனை நாளாய் இங்கு வந்து தின்பாயே, அது மாதிரி செய்யக் கூடாதா, இன்றைக்கு?'' என்றார். ஆனால் மற்றப் பாயிண்ட்ஸ்மேன்களெல்லாம், ''என்ன சார் நடந்து போச்சு? சாப்பிட்டுக் கொண்டிருப்பவன் என்ன செய்வானாம்! பையன் என்ன பாயிண்டைத் தப்பிதமாகவா அடித்துவிட்டான்!'' என்று பக்கிரியின் பக்கமே பேசினார்கள்.

இவர்கள் ஆயிரம் பேசலாம். ஆனால் சட்டம் என்று ஒன்று இருக்கிறதல்லவா!

மறுநாளே ஆபீசிலிருந்து கடிதம் வந்துவிட்டது, பக்கிரியிடம் சமாதானம் எழுதி வாங்கி அனுப்பச் சொல்லி. ஆபீசரே நேரில் பார்த்த விஷயம். பிறகு என்ன எழுதுகிறது? நடந்த உண்மையைத் தயவு செய்து மன்னிக்கும்படி எழுதிக் கொடுத்தான் பக்கிரி. கோணல் மாணலாய் எழுதி வேலைக்கு ஆபத்துத் தேடிக் கொள்ளாமல், அதுவரையில் கௌரவமாக நடந்துகொண்டானே!

ஆபீசர் பார்த்தார். என்னதான் உண்மை சொல்லியிருந்தாலும் மன்னிக்கக் கூடிய விஷயமா அது! 'இரண்டு வருஷங்களுக்குச் சம்பள உயர்வு கிடையாது' என்று பக்கிரிக்குத் தண்டனை அனுப்பிவிட்டார். அதைக் கேட்டதும், ஏதோ அணுக்குண்டைத் தூக்கி அவன் தலையில் போட்டாற் போலிருந்தது. தன் சக ஆட்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டு ''இது குறித்து மேலிடத்திற்கு 'அப்பீல்' செய்யவேண்டும் சார்'' என்று வந்தான் ஸ்டேஷன் மாஸ்டரிடம். ''மேலிடத்திற்கு எழுதினாயோ, தொலைஞ்சே நீ. ஏதோ உண்மையை ஒத்துக் கொண்டாயே என்று இது வரை உன்னை விட்டு வைத்திருக்கிறார் ஆபீசர்'' என்றார் அவர். ''அதற்காக இரண்டு வருஷங்கள்! சம்பள உயர்வு போய்விட்டதே!'' என்று துடித்தான். அதற்குள் பக்கத்து ஸ்டேஷனிலிருந்து வண்டி புறப்பட்டு விடவே, ''ஓடு பாயிண்டுக்கு'' என்றார் ஸ்டேஷன் மாஸ்டர். ஓடியே போய் விட்டான் பக்கிரி.

நாட்கள் நடந்தன. மாற்றல் வந்துவிட்டது பக்கிரிக்கு. அந்த ஸ்டேஷனை விட்டுப் போய்ச் சேர்ந்தான் பக்கிரி.

போன இடம் சற்றுச் சௌகரியமாகவே தெரிந்தது பக்கிரிக்கு. சாப்பாட்டு வேளையில் வண்டி ஒன்றும் அங்கு வரவும் இல்லை.

ஆனால் பழனியைத்தான் படிக்க வைக்க முடியாமற் போய்விட்டது. அந்த ஊர் பேப்பர் ஏஜண்டிடம் அமர்த்தி, பிளாட்பாரத்திலேயே பேப்பர் விற்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டான்.

ம ம ம

ஏதோ ஓர் அக்கப்போர் விசாரணைக்குச் சென்றிருந்த ஆபீசருக்கு, அங்கேயே வெகு நாழியாகி விட்டது. அதற்குள் அவர் செல்லும் ஊருக்கு எல்லா வண்டிகளும் போய்விட்டன. கடைசியில் ஒரு கூட்ஸ் வண்டி தான் போக இருந்தது. மறுநாள் பொங்கலுக்குத் தவறாமல் வீடு போய்ச் சேர, அந்த வண்டியிலேயே தம் பெட்டியை மாட்டுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார் ஆபீசர்.

அந்த ஸ்டேஷனை விட்டு வண்டி புறப்பட்டதுமே, பெருங் காற்றும் மழையும் வந்து சேர்ந்தன.

வண்டி எங்கும் நிற்காமல் கன வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. நாலைந்து ஸ்டேஷன்களைத் தாண்டியிருக்கும், திடீரென வேகமாய்ச் சென்ற வண்டி ஜிக்குபுக்கு என்று சற்று மெதுவாய்ப் போக ஆரம்பிக்கவே, ஜன்னல் வழியே பார்த்தார் ஆபீசர். அது மேடான இடம்; வேகமாய்ப் போகமுடியுமா? அதற்குள் மழைச் சாரல் அவர் தலையை நனைக்கவே வெடுக்கென ஜன்னலை மூடிவிட்டு உள்ளே உட்கார்ந்துவிட்டார்.

சற்று நேரம் கழித்து, அத்தனை மெதுவாய்ச் சென்றுகொண்டிருந்த வண்டி திடுக்கென வேகமாய்ப் போக ஆரம்பித்ததே! உடனே ஜன்னலைத் திறந்து பார்த்தார். ஐயையோ! எதிர்த்தாற் போல் எதையும் காணோமே! தன் பெட்டி மாத்திரம் அறுத்துக்கொண்டு கீழ் இறக்கத்தை நோக்கியல்லவா ஓடிக் கொண்டிருந்தது! பாவம்! என்ன செய்வார்! குய்யோ முறையோ என்று கத்தினார். அந்தக் கொட்டு மழையில் பக்கத்தில் யார் தென்படுவார்கள்!

காலையிலேயிருந்து விடாதுமழை பெய்துகொண்டிருந்ததனால், அந்த ஸ்டேஷனில் பேப்பர் ஒன்றும் சரியாய் விற்கவேயில்லை. பேப்பர்க் கட்டை நனையாமல் உள்ளே வைத்துவிட்டு, தன் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தான் பழனி. அப்பொழுது பிளாட்பாரத்தில் வந்து நின்ற வண்டியிலிருந்து நாலா பக்கமும் ஜனங்கள் பிரிந்து சென்று கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயம் இப்படித் திரும்பினவன், ஏதோ ஒரு பெட்டி மாத்திரம் ஸ்டேஷனை நோக்கி வந்துகொண்டிருந்ததைப் பார்த்துவிட்டான். ஏது இது? இந்த ரெயிலில் வந்து மோதிக்கொண்டு விடுமே! எழுந்து ஓடினான்; ஓடினான்!

அந்தப் பெட்டியின் உள்ளிருந்த ஆபீசரும், அங்கு ரெயில் நிற்பதைப் பார்த்துவிட்டார். "ஆ! நம் கதி இப்படியா ஆகவேண்டும்! நாளைக்குப் பொங்கல் ஆயிற்றே! இதில் இடிபட்டு நாம் நொறுங்க வேண்டுமா! ஐயோ" என்று கதறினார். யாரோ ஒரு பையன் மழையில் நனைந்துகொண்டே ஓடி வருவதையும் பார்த்தார்.

அந்தப் பெட்டி பாயிண்டின் அருகில் வருவதற்கும், பழனி நறுக்கென்று அதைத் திருப்பிப் பக்கத்து லயனுக்குப் போடுவதற்கும் சரியாக இருந்தது. உடனே அந்தப் பெட்டியின் வேகம் தணிந்து பக்கத்து லயனில் போய் நின்றது. 'ஆ! நாம் அதில் மோதவில்லையா? பக்கத்து லயனில் வந்து நிற்கிறோமே!'—அப்படியே ஆச்சரியத்தில் அமிழ்ந்து போனார் ஆபீசர்.

அதற்குள் ஸ்டேஷன் மாஸ்டர் ஓடிவந்தார் அங்கே. பாயிண்ட்ஸ்மேன் பக்கிரி ஓடி வந்தான், பழனியும் ஓடிவந்தான். "என்ன இது? எப்படி? உங்கள் பெட்டி எங்கே அறுந்து போயிற்று?" என்று கேட்டார் ஸ்டேஷன் மாஸ்டர். "எல்லாம் இருக்கட்டும், சரியான சமயத்தில் பாயிண்ட் அடித்து எனக்கு உயிரைக் கொடுத்தாயே நீ!" என்று அவனை

அப்படியே தழுவிக்கொண்டார் ஆபீசர். "நம்ம பையன் தானுங்க. இது மாதிரி அந்த ஸ்டேஷனில் பாயிண்ட் அடித்துவிட்டு எனக்கு இரண்டு வருஷம் தண்டனை வாங்கி கொடுத்தவனுங்க" என்றான் பக்கிரி. "ஆ! அதை நாளைக்கு ரத்து செய்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே இறங்கி, புறப்படுவதற்குத் தயாராயிருந்த அடுத்த ரெயிலில் போய் ஏறிக்கொண்டார். பெட்டியையும் படுக்கையையும் பக்கிரிதான் எடுத்துக் கொடுத்தான். கூஜாவைப் பழனி கொண்டு வந்தான்.

வாட்டசாட்டமாயிருந்த பழனியை நன்றாகப் பார்த்தார் ஆபீசர். "எதுவரை வாசித்திருக்கிறான் பையன்? வயது என்ன ஆகிறது?" என்று விசாரித்தார். "ஒன்பதாவது வரை படித்திருக்கானுங்க. பதினெட்டு வயதுக்கு இரண்டு மாசம் குறையுதுங்க" என்றான் பக்கிரி. "சரி, இன்னும் இரண்டு மாதங்கள் முடிந்ததும் பையனை என்னிடம் அழைத்து வா. 'பிரேக்ஸ்மேன்' வேலை போட்டுத் தரேன்" என்றார் ஆபீசர். "அப்படியே செய்யுங்க சாமி" என்று கையெடுத்துக் கும்பிட்டான். பழனியும் அவரை நன்றிப் பெருக்குடன் பார்த்தான்.

அந்த இரண்டு மாதங்களும் நாளைக்கே முடிந்துவிடக் கூடாதா என்றிருந்தது பையனுக்கு. பிரேக்ஸ்மேனிலிருந்து பிறகு கார்டு ஆகிவிடலாமல்லவா!

துப்பறியும் சுப்புசாமி

தமிழ்த்தம்பி...

துப்பறியும் சுப்புசாமி அந்த நகருக்குப் புதிது. வழக்கம் போல அந்த ஊரிலும் அன்று ரோந்து சுற்றக் கிளம்பினார். இரவு பதினொரு மணி இருக்கும். அன்று அமாவாசைக்கு முதல் நாளாதலால் ஒரே இருட்டு. இடி மின்னலின் காரணமாகத் தெருவிலுள்ள மின்சார விளக்குகள் அணைந்துவிட்டன. வெளிச்சம் தேவைப்பட்ட இடங்களில் மட்டும் தம் கையில் இருந்த 'பாட்டரி'யை உபயோகித்துக்கொண்டார்.

பாதித் தெருவைக் கடந்திருப்பார். அப்பொழுது அவர் காதுகளில் தெளிவாக இந்தக் குரல் கேட்டது:

"டேய், பிச்சாண்டி! அந்தப் பிச்சுவா ஒன்றை எடுத்துக் கொண்டு வாடா!"

இதைக் கேட்டதும் அவர் 'சடார்' என்று நின்றார். குரல் வந்த திசையை நோக்கினார். அங்கே ஒரு வீட்டின் உள்ளே விளக்கு எரிவது தெரிந்தது. இது சந்தேகத்திற்கு இடமானதல்லவா? அதுவும் துப்பறியும் சுப்புசாமிக்குச் சொல்ல வேண்டியதில்லை. மெள்ளப் பூனைபோல அந்த வீட்டிற்கு அருகில் போனார். அந்த வீட்டின் திண்ணையின் மேல், ஒரு வழிப்போக்கன் மாதிரிப் படுத்துக்கொண்டார். உள்ளே நடக்கும் உரையாடல்களை உற்றுக் கேட்க ஆரம்பித்தார்.

"இந்தாங்க, பிச்சுவா!"

"அடே! பரவாயில்லையே; பளபளன்னு இருக்கே! சரி, அந்த நகைப் பெட்டியை நாளைக்கே அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்!"

"அனுப்பி விடுகிறோம்."

"நாளைக்கு அந்த ஸி.ஐ.டி.யை வெட்டி முடிச்சிடணுமடா! ஒரு வழியா அந்த வேலையை முடித்து விட்டால்தான் தொந்தரவு ஒழியும்."

இந்த இடத்தில் சுப்புசாமியின் நெஞ்சு 'படக், படக்'கென்று அடித்துக்கொண்டது!

"டேய்! பத்து ரூபாய் நோட்டு அடித்து முடிந்துவிட்டதா?"

"இன்னும் இல்லையே!"

"நாளைக்காவது இரவோடு இரவாக அடிக்கச் சொல்லு. நல்ல மை போட்டு அற்புதமாக அடிக்கச் சொல்லுடா."

'சரிதான்; கொலை, கொள்ளை, கள்ள நோட்டு; எதுவுமே பாக்கி இருக்காது போலிருக்கிறதே! இவ்வளவு பெரிய இடம் இருக்கிறது என்று ஒரு மாதமாக நமக்குத் தெரியாமலேயே போய்விட்டதே! ஓ....! நாளைக்கு, அடித்துக்கொண்டு வந்த நகைப் பெட்டிகளைக் கடத்தப்போகிறார்கள். இனி, சந்தேகம் என்ன? ஒரு விநாடிகூடத் தாமதிக்கக் கூடாது' என்று எண்ணிய சுப்புசாமி எழுந்து 'மட மட'வென்று நடக்கத் தொடங்கினார். நேரே போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தார்.

அந்த வீட்டில் இதுவரையில் பேசிய குரல், "டேய், பிச்சாண்டி! எதுக்கு இவ்வளவு தூரம் சொல்கிறேன் என்றால், இப்பொழுது நான் ஊருக்குப் புறப்படுகிறேன். இரவு இரண்டு மணி வண்டியில் போகிறேன். இரண்டு நாளில் திரும்பிவிடுவேன். வந்ததும் எல்லாச் சரக்குகளையும் அந்தந்த கடைகளுக்கு அனுப்பிவிட வேண்

டும். தெரிந்ததா?'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்தார். வெளியே கால் எடுத்து வைத்தார். ''ஓ.. தெரிந்தது! ஆனால் அவசரம் ஒன்றுமில்லை. இன்னும் இரண்டு நாட்கள் கழித்தே ஊருக்குப் போய்க் கொள்ளலாம்!'' என்று கூறியபடி இன்ஸ்பெக்டர் படிகளில் ஏறிக்கொண்டிருந்தார்.

வீட்டுக்காரர் கடைசியாகக் கூறியதைக் கேட்ட சுப்புசாமி, ''கள்ளச் சாராயம் ஒன்றுதான் பாக்கி இருக்கிறது என்று நினைத்தேன். அதுவும்....'' என்றார். இதைக் கேட்ட வீட்டுக்காரர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''என்ன சார்! என்ன? ஒன்றும் புரியவில்லையே!'' என்று படபடத்தார்.

''புரிய வைப்பதற்காகத்தானே வந்திருக்கிறோம்!'' என்று கூறிவிட்டு, அங்கு வர நேரிட்ட காரணங்களையும், தம் சந்தேகங்களையும், துப்புகளையும் அவிழ்த்து விட்டார் இன்ஸ்பெக்டர். அதைக் கேட்ட அந்த வீட்டுக்காரரும் அவருடன் இருந்த ஆட்களும் வயிறு வலிக்கச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். எவ்வளவோ முயன்றும் அவர்களால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை!

''இன்ஸ்பெக்டர், சார்! இந்தாருங்கள், இதுதான் பிச்சுவா!''

''என்ன, புத்தகமா?'' என்றார் இன்ஸ்பெக்டர் வாயைப் பிளந்தவாறு.

''ஆமாம், சார்! ஆமாம். 'நகைப் பெட்டி' என்னும் வெளியீடு புத்தகத்தைத்தான் நாளை எங்கள் விற்பனையாளர்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்று கூறினேன். 'ஸி.ஐ.டி' என்ற வெளியீடு இன்னும் ஓரங்களில் வெட்டவே யில்லை—அதாவது 'கட்' செய்யவே இல்லை. இதை முடித்து விடும்படி சொன்னேன். 'பத்து ரூபாய் நோட்டு' என்பது ஒரு புதிய புத்தகத்தின் பெயர். அது இன்னும் அச்சடிக்கவேயில்லை. இந்த வெளியீடுகளை யெல்லாம் விரைவில் வெளியிட வேண்டுமாதலால் உடனே அச்சடிக்கச் சொன்னேன். இதையெல்லாம் கேட்டவர் துப்பறிபவராகப் போய் விட்டதால் விபரீதமாக மாறிவிட்டது. கடைகளுக்கு அனுப்ப இந்தப் புத்தகங்களைத்தான் 'நம் சரக்குகள்' என்று கூறினேன். இது ஒரு பதிப்பகம் சார்..! இது ஒரு பதிப்பகம்!'' என்று கூறி முடித்து விட்டுச் சிரிக்கத் தொடங்கிவிட்டார் வீட்டுக்காரர்.

''இ..ஈ..!'' என்று இளித்துக் கொண்டே இருவரும் வெளியே வந்தனர். சுப்புசாமி அந்த வீட்டின்மேல் மாட்டியிருந்த பலகையின் மீது 'பாட்டரி' வெளிச்சத்தைப் பாய்ச்சினார். அந்தப் பலகையில், 'டுமீல் பதிப்பகம்' என்றிருந்தது.

''என்ன, துப்பறியும் சிங்கம் சுப்புசாமி அவர்களே! உங்கள் துப்பு 'டப் - டுப்! - டபார்!' என்று வெடித்து விட்டதே!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

ஷாவின் தாடி

ஜி. எஸ். கைலாஸ்

ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ நாடகம் ஒன்று எழுதியிருந்தாள். அந்த நாடகம் பிரசுரமாகி வெகு விரைவிலேயே நடிக்கப்படுவதற்கு மேடைக்கும் வந்துவிட்டது. அந்த ஐரோப்பிய ஸ்திரீக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தன்னுடைய நாடகத்தைக் கண்டு களிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் தனது எல்லா நண்பர்களையும் கட்டாயமாக நாடகத்திற்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள்.

இலக்கிய உலகில் மிகவும் பிரசித்திபெற்றுள்ள ஆசிரியர் பெர்னாட்ஷாவைப்பற்றித் தெரியாதவர்கள் யாராவது இருப்பார்களா? அந்த ஸ்திரீ பெர்னாட்ஷாவையும் அவசியம் வரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டாள். ஷாவும் வரச் சம்மதித்தார். கொட்டகையில் ஏகக் கூட்டம் நிரம்பியிருந்தது. நாடக ஆசிரியை தன் நண்பர்களுடன் பெர்னாட்ஷாவையும் அழைத்துக்கொண்டு கொட்டகைக்குள் வந்து சேர்ந்தாள். முன்புறம் அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் எல்லோரும் அமர்ந்தனர். நாடக ஆசிரியைக்குப் பின்புறமுள்ள நாற்காலி ஒன்றில் ஷா உட்கார்ந்துகொண்டார். நாடகம் ஆரம்பிப்பதற்கு இன்னும் நேரமிருந்தது.

அந்த ஸ்திரீ ஷாவினிடம், ''நீங்கள், நான் எழுதிய இந்த நாடகத்தைக் கடைசி வரையில் இருந்து பார்த்துவிட்டுத்தான் செல்லவேண்டும்'' என்றாள். ஷாவும் ''அப்படியே ஆகட்டும்'' என ஆமோதித்தார். கணகணவென மணி ஒலிக்க முன் திரை சுருண்டு மேலே எழும்பியது. நாடகம் ஆரம்பமாகி விட்டது. எல்லாரும் நாடகத்தையே ரசித்தார்கள்.

பெர்னாட்ஷா சற்றுச் சௌகரியமாகப் பார்ப்பதற்காக முன்புறமுள்ள நாற்காலியில் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு சற்றுக் குனிந்தவண்ணம் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஷாவின் தாடி முன் உட்கார்ந்திருந்த நாடக ஆசிரியையின் கன்னத்தில் பட்டுக் கொண்டிருந்தது.

நாடகம் ஆரம்பித்ததிலிருந்து பூலோகமா, சுவர்க்கலோகமா என்பதே தெரியாமல், மிக்கக் கவனத்துடன் நாடக பாத்திரங்களின் சம்பாஷணைகளிலேயும் நடிப்பிலேயும் ஈடுபட்டிருந்த ஆசிரியை, தன் கன்னத்தில் ஏற்பட்ட குறுகுறுப்பு உணர்ச்சியைக் கண்டு, தன் கூந்தல்தான் அவிழ்ந்து விழுந்திருக்கிறதென்று எண்ணினாள். நாடகம் பார்க்கும் சுவாரஸ்யத்தில் பின்னால் பார்க்காமலேயே தன் கன்னத்தில் பறந்துகொண்டிருந்த தாடியைச் சற்றுப் பின்னால் ஒதுக்கித் தன் கொண்டைக்குள் செருகிக்கொண்டாள். மேலும் அவிழ்ந்து போகாதபடி ஒரு கிளிப்பைப் போட்டு மாட்டிக் கொண்டாள்.

பல நிமிஷங்கள் கழிந்தன. ஷாவின் முதுகு வலிக்கவே அவர் நாற்காலியின் பின்புறம் சாய்ந்து கொள்வதற்காகத் தலையைத் தூக்கலானார். அப்பொழுதுதான் அவருக்குத் தம் தாடி ஆசிரியையின் கொண்டைக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தது தெரியவந்தது. ஷா அவளை அழைத்துச் சொன்னார்: ''ஸ்ரீமதி அவர்களே, நான்தான் நாடகம் முடியும்வரை இருப்பதாகத் தங்களிடம் வாக்களித்திருந்தேனே! என் வார்த்தையில் ஏன் நம்பிக்கை ஏற்படவில்லை? இடையிலேயே எழுந்து போய்விடுவேன் என்பதற்காக என் தாடியைப் பிடித்துக் கட்டிப் போட்டு விட்டீர்களே!''

நாடக ஆசிரியை அவர்களுக்கு அப்பொழுதுதான் தான் செய்திருந்த அசட்டுத்தனம் புரிந்தது.

பொறுமைக்கார நரி

ஜ. சாமிநாதன்

ஒரு பெரிய காட்டில் ஓங்கி வளர்ந்த மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் உச்சியில் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்தது ஓர் கழுகு. மரத்தின் நடுவில் ஒரு பொந்து இருந்தது. அந்தப் பொந்தில் வாழ்ந்தது ஒரு பூனை.

கழுகுக்கு ஐந்து குஞ்சுகள் இருந்தன. பூனைக்கு மூன்று குட்டிகள் இருந்தன. பூனையும் கழுகும் இணைபிரியாது வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் அந்தக் காட்டின் நடுவில் ஓர் இடத்தில் ஒரு சோற்று மூட்டை இருந்தது. அந்தச் சோற்று மூட்டை ஒரு வேடனுடையது. அவன் தினமும் சோற்று மூட்டையை அங்கே தான் வைத்துவிட்டுப் போவான்; ஆனல் இன்று அவன் திரும்பி வந்தபோது அது இல்லை!

அந்தக் கழுகு, அதை வேடன் வைத்துவிட்டுப் போனவுடன் கொத்திக் கொண்டு தான் வாழும் மரத்திற்குக் கொண்டுவந்து விட்டது. அங்கே காத்திருந்த பூனை அந்த மூட்டையைப் பிறாண்டிக் கிழித்தது. பிறகு கழுகும் பூனையும் அந்த உணவைப் பகிர்ந்து கொண்டன. இப்படியே சில நாட்கள் கடந்தன.

வேடனுக்கு முதலில் இது தெரியவில்லை. ஒரு நாள் அவன் ஒளிந்திருந்து, கழுகு மூட்

டையை எடுத்துப் போய்ப் பூனையுடன் உண்பதைப் பார்த்து விட்டான். கழுகும் பூனையும் இப்படி இணைபிரியாது இருப்பதைக் கண்டு அவன் மனம் இளகியது. அதனால் அவன் தினந்தோறும் இரண்டு சோற்றுமூட்டைகள் கொண்டு வருவான்; ஒன்றைக் கழுகு வரும் இடத்தில் வைத்துவிடுவான். அவன் வைத்துவிட்டுப் போன மறுகணத்திலிலேயே கழுகும் அதை எடுத்துக்கொண்டு போய்விடும்.

இதைக் கண்டது ஒரு பொறாமைக்கார நரி! 'தனக்கு அந்த அருமையான சோறு கிடைக்கவில்லையே, அது கிடைப்பதற்கு என்ன வழி?' என்று யோசனை செய்தது.

நரிதான் தந்திரத்தில் புலியாச்சே! உடனே அது கழுகினிடத்தில் சென்றது. ''கழுகாரே! உம்முடைய குஞ்சுகளைத் தின்பதற்குப் பூனை சமயம் பார்த்துக்கொண் டிருக்கிறது! வேண்டுமென்றால் நாளைக்குப் பாரும்.பூனை வெளியே செல்லவே செல்லாது'' என்றது. கழுகும், 'மறுநாள் கூட்டுக்குள்ளேயே, ஒளிந்திருந்து பார்க்கலாம். வேடனுடைய சோற்று மூட்டையை எடுத்து வரவேண்டாம்' என்று நினைத்தது.

பூனையிடத்திலும் சென்று, ''பூனையாரே, நாளைக்கு உமது குட்டிகளைக் கழுகு தின்னப்போகிறதாம். பாருங்களேன், நாளைக்குக் கழுகு வெளியே செல்லவே செல்லாது'' என்று ஓதியது நரி.

இது இப்படியிருக்க, வேடன் மனைவி வேடனைப் பார்த்து, ''ஏன் தினம் இரண்டு சோற்று மூட்டைகள் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள். தினமும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி வந்த வேடன் அன்று உண்மையைச் சொல்லிவிட்டான்.

இதை அறிந்த வேடனின் மனைவி மிகக் கோபமடைந்தாள் அன்றைக்கு விஷம் கலந்த சோற்றைச் சிறிய மூட்டையாகக் கட்டி வேடனிடம் கொடுத்தாள்.

விஷம் அதில் இருப்பதை அறியாமல் வேடனும் அந்தச் சின்ன மூட்டையைக் கழுகுக்கு வைத்தான்! ஆனால் பாவம்! வந்தது கழுகல்ல, நரிதான். கழுகையும் பூனையையும் தந்திரத்தால் மரத்திலேயே இருக்கச் செய்துவிட்டு, வெற்றியுடன் அந்த இடத்துக்கு வந்த நரி சோற்று மூட்டையைப் பிரித்து ஆவலுடன் உண்ண ஆரம்பித்தது! அதுதான் விஷம் ஆயிற்றே!

சிறிது நேரம் கழித்து, தலைசுற்றிக் கீழே விழுந்து இறந்தது.

எப்படியோ கழுகுக்கும் பூனைக்கும் நரியின் தந்திரம் தெரிந்து, மறுபடியும் இணைபிரியாமல் வாழலாயின!

அந்தப் பாழடைந்தச்சிறையிலே ஒரு பாழும் கிணறு உண்டு. அதிலே மேமுனு என்று ஒரு பெண்பூதம் இருந்தது. அது இரவில் மட்டும் வெளிவரும். அன்றிரவு வெளிவந்து...
ஹா! இந்தச் சிறை என்ன இவ்வளவு பிரகாசமாய் இருக்கிறது! ஏதோ முக்கிய சம்பவம் நடந்திருக்கிறது!
காமர் சயனித்துறங்கும் இடத்துக்கு வந்ததும்......
ஹா! இவனன்றோ ஆண் அழகன்! முகத்தைப் பார்த்தால் பெரிய தர்மவானாக இருப்பான் போலிருக்கிறதே!
இவனுக்கு எப்படியும் ஒரு பெரிய நன்மை செய்ய வேண்டும்! என்ன செய்யலாம்!
இவ்விதம் யோசித்துக்கொண்டே மேமுனு இரவு சஞ்சாரத்துக்குக் கிளம்பியது. அதன் பாதையில் ஒரு குட்டிப்பூதம் வழி தவறி வந்து விட்டது. கோபம் கொண்ட மேமுனு அதைப் பிடித்து......
ஏ! சின்னப்பூதமே! நான் போகும் வழியில் நீ ஏன் வந்தாய்? உன்னைக் கொன்று விடுகிறேன்!
சகோதரி! கருணை காட்டு! என் பெயர் தஷ்! நான் கயூர் மன்னர் ஆளும் தீவிலிருந்து வருகிறேன். ஆகா, அவருக்கு ஒரு புதல்வி இருக்கிறாள். அவளைப் போன்ற அழகியை நான் எங்கும் கண்டதில்லை. அதே நினைப்பில் நான் வழி தவறி விட்டேன்!
ஹஹ்ஹா! மூடப் பூதமே! இளவரசன் காமரை விட வா ஒரு பேரழகி இருக்க முடியும். பொய் சொல்கிறாய்!
சகோதரி! நீ வேண்டுமானால் வந்து பார். திருமணத்திற்கு அவள் இசையாததால் அவள் தந்தை கயூர் அவளை சிறையில் வைத்திருக்கிறார்!

முதலில் நான் சொல்லும் பேரழகன் காமனைப் பார்! பின்பு நீ சொல்!
சரி
பூரண சந்திரனைப் போன்ற இந்த முகத்தைப் பார்! உன் அழகி இவனுக்கு ஈடு ஆவாளா சொல் பார்க்கலாம்!
சகோதரி! கோபிக்காதே! நீ பெண் ஆனதால் ஆண் அழகு தெரிகிறது. பாதுர் இவனை விட மிக அழகி!
ஹஹ்ஹ! ஏமுடமே! உடனே போய் உன் ராஜகுமாரியைத் தூக்கி கொண்டுவா, பார்ப்போம்! இல்லையோ தொலைந்தாய்!
இதோ!
துஷ் பாரசிக நாட்டை விட்டு ஒரு தீவையடைந்தது. அங்கிருந்து ராஜகுமாரி பாதுர் தூங்கும் மஞ்சத்தைத் தூக்கிக்கொண்டு வந்து மெழ்னு சொல்படி காமரின் மஞ்சத்துக்கு அருகில் வைத்தது.
எனக்குத் தெரிந்த ஒரு மந்திரவாதி இருக்கிறன். அவனே சொல்லட்டும்!
யார் அழகு?
துஷ் தன்காலால் ஓங்கி உதைக்கவே...
உங்கள் அடிமை! என்ன வேண்டும் சொல்லுங்கள்?
இங்கே படுத்திருக்கும் இருவரில் யார் அதிக அழகு சொல் பார்க்கலாம்!
ஆகா, இவர்கள் இருவரும் ஒருவருக்காகவே ஒருவர் படைக்கப் பட்டிருக்கிறார்கள்! யார் மிகவும் அழகு என்று சொல்லமுடியாது. ஆனல்........
என்ன ஆனல்...
தொடரும்.

எங்கள் பகுதி

*கனிதரும் கண்ணன்

தின்னப் பழம் கொண்டு வந்து தந்தான் பாரதியின் கண்ணன். இந்தப் பத்திரிகைக் கண்ணனே தெவிட்டாத தீஞ்சுவைக் கதைக் கனிகள் கொண்டுவந்து தருகிருன். கனிகளுள் சிறந்த முக்கனிகளைப் போலவே கண்ணனில் ஈடும் இணையுமற்று விளங்குவன மூன்று. அவை லீடர்மணி, சந்திரகிரிக் கோட்டை, படத் தொடர்கதை ஆகியவை. இந்த இதழில் படத் தொடர்கதை இல்லாதது இதழின் தரத்தை ஓரளவுக்குக் குறைக்கிறது.

ஆனாலும் அதற்குப் பதில் 'இரும்புப் பெட்டி' என்ற கதை இனிமையாக இருக்கிறது. அதைப் படித்ததும் நாமும் பரமனைப்போல பலசாலியாக இல்லையே என்று வருத்தமாக இருக்கிறது. மூன்று பொம்மைகள் கதையை இதற்கு முன்பே படித்திருக்கிறேன். எங்கே எப்பொழுது என்றுதான் நினைவு இல்லை. கதைகளெல்லாம் எப்பொழுதும் நல்ல நீதிகளைப் போதிப்பனவாக இருக்க வேண்டுமே யல்லாது அநீதி வென்றதாக இருக்கக் கூடாது. அதற்கு நேர்மாருக ''எழுதியது யார்'' என்ற கதை தவறு செய்த பாலு தப்பிப்பதாக முடிக்கப்படுகிறது.

'அருமையான சம்பவம்' நிஜமாகவே அருமையாக உள்ளது. 'போட்டோ க்விஸ்'ஸில் நான் கின் விடையை நாளுகவே கண்டு பிடித்துவிட்டேன். 'எங்கள் பகுதி' எப்போதும் போல் இருக்கிறது. இந்த இதழ் மூலம் நான் அடைந்த பயன்களில் முக்கியமானது சாரதாமணி தேவியைப் பற்றி அறிந்து கொண்டது. பேராசிரியர் விஞ்ஞானத்தின் பதில்கள் ஒவ்வொன்றும் அறிவுக்கு விருந்து.

கொத்தமங்கலம் சுப்புவின் பாட்டும் அதற்குச் சித்திரகாரரின் படமும் ஒன்றுக்குமேல் ஒன்று அருமையாயிருக்கின்றன. 'உழைப்போர்' என்ற கவிதையின் கருத்து நன்ருக இருக்கிறது. 'குழந்தைப் பாடல்' பெயருக்கேற்ப எளிமையாயிருக்கிறது.

கண்ணன் காலண்டரைக் கத்தரித்து, அட்டையில் ஒட்டி, மாட்டப்போகிறேன். 15-ஆம் தேதி இதழில் வெளிவரும் படத் தொடர்கதை எப்படி இருக்கும் என்றறிய ஆசை அடித்துக் கொள்கிறது. ஆகையால் அவ்விதழை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

ந. மெய்ப்பொருள், அம்மாப்பேட்டை, தஞ்சை ஜில்லா.

கைராசிக்காரர்

இரும்புப் பெட்டி:

இரண்டு இடங்களிலே நம்ப முடியாத நிலை இருப்பினும் ஆசிரியரின் கற்பனை மடை திறந்த வெள்ளமாக உருவெடுத்துளது! கதையின் சுவாரஸ்யத்திற்குச் சிறிதும் களங்கம் ஏற்படாமல் முடித்திருப்பது கதாசிரியரின் திறமையைக் காட்டுகிறது.

மூன்று பொம்மைகள்:

பழங்காலக் கதைகளைத் தழுவி எழுதிய கதை! இந்த விஷயத்தில் வேதவல்லி அவர்களுக்கு நம் அநுதாபம்! ஆனல் நன்ருக நீதியொன்றைப் போதிக்கிறபடியால் அவருக்கு நம் ஆறுதல்!

எழுதியது யார்:

'தன் கையே தனக்குதவி' என்ற கருத்திற்காக ஒருவனைத் திருடனுக்குவது கற்பனைக்கு ஒவ்வாது! முயற்சி செய்து கதை எழுதியவன் ஒருவன்! அதைக் காப்பி எடுத்தவன் ஒருவன்! இறுதியில் முயன்றவனுக்கு முட்டாள் பட்டமா? சே, சே!

---

* ரூ. 5 பரிசுபெற்ற கடிதம்

கட்டுரை:

சாரதாமணி, வோல்ட் மீட்டர் போன்றவைகள் கண்ணனில் வெகுவாக வரவேற்கப் படுகிறது! இம் மாதிரிக் கட்டுரைகள் வாழ்க்கைக்கு அதிகம் தேவைப்படுவன!

கவிதை-

நேருவைப்போல் ஆளப் போகிறேன்:

கவிதைக்காகவே பிறந்த கவிஞர் வரைந்த கவிதையைக் காலமும் ஞாலமும் கண்டிப்பாய் வரவேற்கும்!

உழைப்போர்:

உழைப்போர்தம் உள்ளத்தை உள்ளபடி உருவாக்கியுள்ளார் 'சசிதேவன்'. கனவுக் காட்சியாய் வரைந்து காட்டி, உழைப்போர் ஆகி உயர்ந்துவிட்டார்! கருத்துள்ள கனவு பொருத்தமாக நனவாகியிருக்கிறது.

தொடர்கதைகள்:

கண்ணனுக்கு அழகிய இரு அணிகலன்கள், ஒன்றையொன்று மீறுகிறது! செந்தமிழர் வீரத்தைச் செப்புகிறது சந்திரகிரிக் கோட்டை! வீடுவிட்டு வந்த மாணவனின் உளப்போக்கைப் படம் பிடிக்கிறது லீடர் மணி! அதிலே அரண்மனை வர்ணனை! இதிலே ஊர் வர்ணனை! அதிலே வீரனின் தீரச்செயல்! இதிலே மாணவனின் வீரச்செயல்! வாழ்க உருவாக்கியவர்கள்!

இன்ன பிற . . .

எஞ்சியுள்ளனவாகிய எங்கள் பகுதி, அருமையான சம்பவம், பாலர் கவி அரங்கம், போட்டோ க்விஸ், கேளுங்கள்-பதில் சொல்கிறேன் ஆகிய இவைகள் முறையே விமரிசன ஆற்றல், கற்பனை கலந்த உண்மை நிகழ்ச்சி, கவிதை வளம், மனத்திலே நாட்டம் கொண்ட புதிர்க்குவியல், விஞ்ஞான மதிப்பெண் அதிகரிக்கும் கருவி ஆகியவையாக மாற்றமெடுத்து மழுங்கிப்போன மூளைக்கு மருந்து ஊட்டுகின்றன.

பொதுவில்

'கண்ணன்' மாதம் இருமுறை அறிவு 'இஞ்செக்ஷன்' செய்யும் கைராசிக்கார 'டாக்டர்'!

V. R. பாலசுப்ரமணியன்,
நரிக்கல்பட்டி

கண்ணனோடு பேசினேன்

அடடே! வா கண்ணா! வா!.. அது என்ன கையில்? ஓ, புதுக் காலண்டரா? கொண்டா, இப்படி மாட்டுவோம். அது யார் அங்கே பாடுவது, ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்புவா?..பாட்டு பிரமாதம் கண்ணா! அது சரி; லீடர்மணி என்ன ஆனான் சொல், சீக்கிரம். அட பாவமே, ஒருவருக்கும் தெரியாமல் எழும்பூருக்குக் கிளம்பி விட்டானா! அதோ அங்கே பார். கி. வா. ஜ. சாரதாமணியைப்பற்றி சொற்பொழிவு ஆற்றுகின்றார். பார்த்தாயா! சரி, ஏதாவது கதை சொல்லு. இரும்புப் பெட்டிக் கதையா?கண்ணா,இது ஏதோ பரவாயில்லை. கண்ணா மூன்று பொம்மைகள் கதை நீ சொன்னாய் பார்; அது ஒரு பழைய கதை. கேட்டுக் கேட்டுப் புளித்துவிட்டது. இனிமேல் இப்படிப் பழங் கதைகளைச் சொல்லாதே! என்ன? இ. ஜி. என். வீட்டுக்குப் போகணுமா? சாதாரண வோல்ட் மீட்டரைப் பார்க்கத்தானே? அது சரி கண்ணா, நீ ஒரு குட்டிக் கதை சொன்னாயே 'எழுதியது யார்?' என்று, பிரமாதம் போ. அங்கே யாரோ பாடுகிறார்களே 'தமிழ'னா பாடுவது? ஆமாம், அவரேதான். பாட்டு வெகு ஜோர், கண்ணா! மறந்து விட்டேனே. 'சந்திரகிரிக் கோட்டை' என்னாச்சு? என்ன கண்ணா, விமலன் அப்புறம் என்ன செய்தான்? குந்தவி ஏன் சிரித்தாள் சொல்லு கண்ணா. என்ன முடியாதா! இதோ விட்டேனா பார் உன்னை! அடடே கையில் ஏதோ போட்டோ வைத்திருக்கிறாயே, அது என்ன? கொண்டா பார்ப்போம். க்விஸ் போட்டோக்களா? தேவலையே, பிரமாதமாய் இருக்கிறதே இந்தப் பகுதி?

M. R. ரங்கநாயகி, ஸ்ரீரங்கம்.

புதிர்க் கேள்விகள்

★

1. பாபு சர்க்கரை ஸ்பூனை விழுங்கி விட்டால் என்ன ஆகும்?

2. உன் திருப்திக்கு ஏற்றபடி உனக்கு எப்போது கிடைக்கும்?

3. பூமியை முதன் முதலில் சுற்றியவன் யார்?

4. கால் இல்லாமல் தரையில் ஓடுவது எது?

5. அ என்ற எழுத்தைச் சொல்லிவிட்டு எப்போது பயப்படுகிறோம்?

6. — — பு இனியது என்ன?

7. உன்னால் தாஜ்மஹலைவிட உயரமாகக் குதிக்க முடியுமா?

8. எது கால் இல்லாமல் வாலோடு பிறந்து, வால் இல்லாமல் காலோடு இறக்கிறது?

9. பகலில் வேலை செய்யாமலே எவன் மாதச் சம்பளம் வாங்குகிறான்?



10. அருவி நீர் மலைச் சிகரத்திலிருந்து விழுவதை எப்போது நிறுத்தும்?

[விடையைத் திருப்பிப் பார்க்க.]

புதிர்க் கேள்விகள்: விடை

1. உனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்திப்படும்போது; 2. சந்திரன்; 3. சர்க்கரை ஸ்பூனால் கரைந்துபோகும்; 4. பூமியை அடைந்ததும்; 5. ஆ என்று அடுத்தபடியாகச் சொல்லும்போது; 6. நட்பு இனியது; 7. தண்ணீர்; 8. முடியும். தாஜ்மஹல் இருந்த இடத்தைவிட்டு அசையாது; 9. தவளை; 10. இரவு காவற்காரன்.

போட்டோ



(1) இது என்ன?

1. பேரிகை
2. டங்கா
3. டமாரம்



(2) இந்த நந்தி எங்கே உள்ளது?

1. தஞ்சாவூர்; 2. மைசூர்;
3. பஸவன்குடி.



(3) இது என்ன சக்கரம்?

1. சாணை பிடிக்கும் சக்கரம்
2. மண் பாண்டம் செய்வது
3. உலையில் காற்று அடிப்பது.



(4) இந்த அழகான கட்டடம் எங்கே உள்ளது?

1. சென்னை ரவுண்டாணா
2. பம்பாய் ஹார்ன்பி ரோடு
3. டில்லி கனாட் சர்க்கஸ்

என். ராமகிருஷ்ணா

க் விஸ்

(5) இது என்ன பூ?

1. பூசணிப் பூ
2. பரங்கிப் பூ
3. பீர்க்கம் பூ





(6) இந்தக் கோட்டை எந்த ஊரில் உள்ளது?

1. பாண்டிச்சேரி
2. காரைக்கால்
3. தரங்கம்பாடி

(7) இந்தக்குளம் எந்த ஊரிலுள்ளது?

1. திருவண்ணமலை தெப்பக்குளம்
2. மஹாமஹக்குளம்
3. வண்டியூர் தெப்பக்குளம்



(8) எந்த ஊரில் உள்ள பீரங்கி?

1. தஞ்சாவூர்
2. ஸ்ரீரங்கப்பட்டினம்
3. செஞ்சிக்கோட்டை

விடை: 40-ஆம் பக்கம்

பாலர் கவி அரங்கம்

பேனா சொல்கிறது:

உலகில் உயர்ந்தவன் யாரென்றால்
உயர்வுடைப் பேனா என்றிடுவர்.

இலங்கிடும் என்புகழ் கண்டிடவே
இதமாய்க் கூறக் கேட்டிடுவீர்!

எனக்கோர் அரிய முள்ளுண்டு.
இன்புடன் எழுத இங்குண்டு.

மனக்குறை தீர்த்து மடலெழுத
மக்களின் துணையாய் நானிருப்பேன்!

பள்ளிப் பிள்ளை கையில்நான்
பதமாய் இருந்து பழகிடுவேன்!

துள்ளும் கருத்தை ஒன்றாக்கி
துளிர்க்கும் கதையாய் அமைத்திடுவேன்!

அமைதி கொண்டு வாழ்ந்திடவே
அன்பாய் மக்கள் மனத்தினிலே

அரிய பண்பை ஊட்டிடுவேன்
அழகுக கட்டுரை யதனாலே!

உலகில் உள்ள அனைவருமே
உயர்வாய்ப் போற்றி எந்தனையே

விளங்கச் சட்டையில் மாட்டிடுவர்.
விருப்பாய் எழுதி மகிழ்ந்திடுவர்.

என்னை உலகோர் போற்றுவதால்
இந்த உலகை எப்படியும்

தன்மையில் உயர்வாய் ஆக்கிடுவேன்!
தாரணி புகழை ஏற்றிடுவேன்!

வ. பழனிச்சாமி, கும்பகோணம்.

சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

விமலன் பேசத் தொடங்கியதுமே சபை கப்சிப் பென்று அடங்கியது. இந்த விநோதமான போட்டியில் இந்தச் சகோதரர்கள் எவ்விதம் பங்கு எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்ற ஆவலே எல்லாருக்கும் அதிகமாய் இருந்தது.

''திரையின் மறைவில் அமர்ந்திருக்கும் பாவையே, நான் தான் விமலன் பேசுகிறேன். இந்தப் போட்டிக்கு நீதான் மூலகாரணம் என்று நம்புகிறேன். சரிதானா?'' என்று தன் முதல் கேள்வியைக் கேட்டான் விமலன்.

அனைவரும் முதலில் கேள்வி கேட்ட விமலனையும் பிறகு பதில் வரும் திசையிலிருந்த திரையையும் மாறிமாறிப் பார்த்தார்கள். இதில் என்ன ஆச்சரியமென்றால் சபையில் இருந்தவர்களுக்கெல்லாம் சரியான பதில் உடனே கிடைத்து, போட்டி சப்பிட்டுப் போய்விடக் கூடாதே என்றுதான் ஒரே சமயத்தில் தோன்றியது. கேள்வி கேட்பவன் முதலில் திணறித் திக்குமுக்காடிப் போகவேண்டும். ஆனால் கடைசியில் எப்படியோ சாகசக்கியமெல்லாம் செய்து போட்டியில் ஜயித்து விடவும் வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள்.

இந்தப் போட்டிக்கு மூலகாரணம் சந்திரவர்ம ராஜாவே தவிர வேறு யாரும் இல்லை என்பதே பொது மக்களின் அபிப்பிராயம். அப்படியிருக்கும்போது இந்த முதல் கேள்வி எப்படிச் சரியாக இருக்கப் போகிறது? இவ்வளவு பகிரங்க ரகசியமான ஒரு விஷயத்தைப் போய்த் தவறாகக் கேட்கிறானே இந்த இளவரசன் என்றுதான் எல்லாரும் நினைத்தார்கள்.

திரையின் பின்னாலிருந்து பதில் வந்தது: ''சரி.''

எல்லாரையும் இந்தப் பதில் ஒரு தடவை தூக்கி வாரிப் போடச் செய்தது. 'சரியா? எப்படிச் சரியாகும்? யாரோ சம்பந்தமில்லாத ஒரு பெண் இந்தப் போட்டிக்கு மூலகாரணமாக இருப்பதாவது? ஒரு வேளை திரைக்குப் பின்னால் இருக்கும் பெண் ராஜகுமாரி இந்துமதியாகவே இருப்பாளோ?' என்றெல்லாம் சபையிலிருந்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் சொல்லி ஆச்சரியப்பட்டுக்கொண்டார்கள்.

சபையின் மற்றொரு பகுதியினருக்கு இந்தப் போட்டியே பொது மக்களின் கண்ணைத் துடைக்கும் ஒரு நாடகமாக இருக்குமோ என்றுகூடச் சந்தேகமாய் இருந்தது.

அமலனுக்குக்கூட இந்தக் கேள்வியும் அதற்குக் கிடைத்த விடையும் ஆச்சரியத்தைத்தான் கொடுத்தன. முந்தி நடைபெற்ற போட்டிகளைக் கண்டு எப்படி விமலன் அவநம்பிக்கைப்பட்டானோ அதே போன்ற அவநம்பிக்கை அவனுக்கும் இப்போது எழுந்தது. முன்னால் இந்தக் கோட்டைக்கு வந்து சேர்ந்த விமலன் ஏதாவது சூழ்ச்சி செய்திருப்பானோ என்று தோன்றியது.

முதல் கேள்வி இவ்வளவு சரியாக அமையும் என்பதை விமலனே எதிர்பார்க்கவில்லை. ''சரி'' என்ற பதில் அவனையும் தூக்கி வாரித்தான் போடச் செய்தது. அவன் என்னவோ குறும்புக்காகத் தான் கேட்டான். ஆனால் அதுவே சரியான கேள்வியாகி விட்டதே!

அடுத்த கேள்வி ஒன்றைக் கேட்டான் விமலன். சரியான கேள்வியாக அது அமையவில்லை. அடுத்துப் பல கேள்விகளை என்னென்னவோ மாதிரியில் என்ன என்னவோ வகையாகக் கேட்டான். இரண்டாவதாக வரவேண்டிய, ''சம்மதம்'' என்ற பதில் கிடைக்கவே யில்லை.

விமலன் மூளையைக் குழப்பிக் கொண்டான். பாதிக் கேள்விகள் அவன் கேட்கும் போதே சபையினரின் கேலிக்கு உள்ளாயின. சில கேள்விகளை அவனுக்கே கேட்கப் பிடிக்கவில்லை. இப்படியே இன்னும் சிறிது நேரம் போனால், நிச்சயம் மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்து விடும்போலிருந்தது. பிறருடைய பரிகாசத்துக்கு ஆளாகும் விஷயம் எவ்வளவு தூரம் ஒருவனுடைய மனசை ஒடித்துவிடும் என்பதை இன்று தான் அவன் நேரில் உணர்ந்தான்.

ஆத்திரத்தோடு அவன், ''பெண்ணே! இப்போதும் நான் தான் விமலன் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். உன் சம்மதத்தைப்பெற எவ்வளவோ கேள்விகள் இருக்கலாம், அவற்றையெல்லாம் என்னால் இங்கே கேட்க முடியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லிவிடு. நான் இந்தப் போட்டியில் வெற்றி பெறுவது உனக்குச் சம்மதந்தானா?'' என்று வந்தது வரட்டும் என்று கேட்டு வைத்தான்.

அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்த அந்தப் பதில் உடனே வந்து விட்டது: ''சம்மதம்!''

விமலன் சந்தோஷ மிகுதியால் துள்ளிக் குதித்தான். நிச்சயம் அவன் இப்போது இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. இனி மூன்றாவது வார்த்தைதான் பாக்கி. ஒரு வார்த்தை. சந்தோஷம் என்று அவள் சொல்லி விட்டால் போதும். அந்த ஒரு வார்த்தையை அந்தப் பெண்ணின் வாயிலிருந்து வரவழைப்பது எப்படி?

அது அத்தனை சுலபமாயில்லை. நேரம்தான் போய்க் கொண்டிருந்ததே தவிர அந்தப் பெண் வாயைத் திறக்கிற வழியாக இல்லை. அவள் சந்தோஷம் என்று சொல்லக்கூடிய எந்தக் கேள்வியும் அவனுக்குத் தெரிந்த வரையில் இருந்ததாகவே தெரியவில்லை.

சபையிலிருந்தவர்கள் யாவரும் அலுத்துப் போனார்கள். அந்தப் புதுமையான போட்டியில் விறுவிறுப்பு இல்லை; கவர்ச்சி இல்லை. கண்ணால் பார்த்துக் களிக்க எதுவும் இல்லை. வெறும் திரையை எத்தனை நேரம்தான் பார்த்துக் கொண்டிருப்பது?

உச்சிப் பொழுதும் கழிந்து விட்டது. விமலன் எரிச்சலோடு கடைசியாக, ''பெண்ணே! நீ எதற்குச் சந்தோஷப்படுவாய் என்று எனக்குத் தெரியவில்லை. நான் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்!'' என்று முடித்தான்.

கடைசி விடை வந்தது: ''சந்தோஷம்!''

உடனே கணகணவென்று மணி ஒலித்தது. சற்றைக்கெல்லாம் திரை அகன்றது. உள்ளே இதுகாறும் அமர்ந்திருந்த மன்றாடியாரின் குமாரி குந்தவி கைகூப்பிக் கொண்டே சபையைப் பார்த்து வணங்கினாள்.

மன்றாடியார் எழுந்து, ''சபையோர்களே! இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற இளவரசர் விமலனை உங்கள் சார்பாக வாழ்த்துகிறேன்!'' என்றார்.

எந்தக் கேள்வியைக் கேட்டால் என்ன? விடைகள் கிடைத்து விட்டன என்று மக்கள் குதூகலத்துடன் கோஷமிட்டனர்.

விமலன் கையில் செப்பு முறியைக் கொண்டு வந்து கொடுத்தார் மன்றாடியார். ஒருவரும் அதைக் கண்டு அவ்வளவாக ஆனந்தப்பட வில்லை. அமலன் எல்லாரையும் பார்த்து வணங்கி விட்டுச் சரசரவென்றுஎழுந்து தன் வீடு திக்குச் சென்றான்.

போட்டி போட்டியாகவே ஒருவருக்கும் தோன்றவில்லை என்பது அப்போதுதான் தெரிந்தது.

2/1/75
சென்னை-600 008

ஏதோ பெயருக்கு [illegible] தாகப் பெயர் பண்ணி விட்டார்கள் என்றே பேசிக்கொண்டு கூடியிருந்தவர்கள் கலைந்தார்கள். கையில் இருந்த முறி அவனைப் பார்த்துக் கேலி செய்வதுபோல் இருந்தது. அந்த அவமானத்தைத் தாங்கமாட்டாமல் அவன் விடுவிடென்று தன் விடுதிக்குப் போனான்.

நேரம் போனதே தெரியவில்லை. விருந்து காத்துக் கிடந்தது. பணியாட்கள் பலர் வந்து அழைத்தும் அவன் கதவைத் திறக்கவில்லை. மன்றுடியாரே நேரில் புறப்பட்டு வந்தார். பலமுறை அழைத்தும் அவன் பதில் கூறுவதாக இல்லை. பாளையக்காரர் என்ன செய்வது என்று புரியாமல் வழி திரும்பினார்.

இந்தச் சமயத்தில் அவரைப் பார்க்க அவருடைய குமாரி குந்தவி வந்தாள். பாளையக்காரரின் மன வருத்தத்தைக் கண்டு அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''குமாரி! இதென்ன சிரிப்பு! இது சிரிக்கும் நேரமில்லை. உன்னாலே வந்த வினைதான் இவ்வளவும்! இளவரசர் மனம் உடைந்து போயிருப்பதாக ஊகிக்கிறேன். இந்தப் போட்டியினால் யாருக்கும் திருப்தியில்லை; நன்மையும் இல்லை!'' என்றார் மன்றுடியார்.

''அப்பா! நான் சென்று இளவரசரைச் சமாதானப்படுத்தி அழைத்து வரட்டுமா''? என்றாள் குந்தவி.

பாளையக்காரருக்கு இது உசிதமாகப் படவில்லை. ''குமாரி! இது தகாது. நீ சின்னஞ்சிறு குழந்தையல்ல! அரண்மனைப் பெண்கள் ஆடவர் விவகாரங்களில் தலையிடலாகாது. முதலில் உன் பேச்சைக் கேட்டு நான் இந்தப் போட்டி வைத்ததே பிசகு!'' என்றார்.

குந்தவியின் முகம் செவ செவ என்று சிவந்துவிட்டது. அவள் அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் திரும்பிவிட்டாள்.

தனியே இருந்த பாளையக்காரருக்குக் குந்தவியின் செயல்கள் எல்லாம் புதிராக இருந்தன. இந்தப் போட்டியின் போக்கையெல்லாம் அவள் முன்பே எதிர்பார்த்தவள் போல் இருந்தாள். ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டே குந்தவி இவ்விதமெல்லாம் நடந்துகொள்கிறாள் என்றே அவருக்குப் பட்டது.

'என்ன இருந்தாலும் இந்த விவகாரங்களில் எல்லாம் பெண்கள் கலந்துகொள்வது கூடாது. யாராக இருந்தாலும் சரியே!' என்று அவர் தமக்குள் கூறிக் கொண்டார்.

கால் நாழிகை கழிந்தது. ஒரு பணியாள் தலைவிரி கோலமாக ஓடிவந்தான். ''அரசே! சந்திரகிரியிலிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கிறான். உடனே தங்களைக் கண்டு நேரில் பேசவேண்டுமாம்! அவசரமாம்; ரகசியமாம்!'' என்றான்.

''ஆ! தூதுவனா?'' என்று எழுந்து விரைந்தார் பாளையக்காரர்.

அவரைக் கண்டதும் தூதுவன் முழந்தாளிட்டுப் பணிந்து, ''அரசே! அமைச்சர் அருளேந்தி இந்த ஓலையை அனுப்பியிருக்கிறார்கள்'' என்று ஒரு பட்டுச் சுருள் ஒன்றை நீட்டினான்.

பாளையக்காரர் அதை வாங்கி அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தார். பாதி படிக்கும்போதே மன்றுடியார் பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டார்.

''ஹஹ்ஹா! அப்படியா சேதி?'' என்று எழுந்தது கோபம்; துடித்தது மீசை! (தொடரும்)

க்விஸ் விடை

1. டமாரம்.
2. தஞ்சாவூர்.
3. மண்பாண்டம் செய்வது.
4. டில்லி கனாட் சர்க்கஸ்.
5, பரங்கிப் பூ.
6. தரங்கம்பாடி.
7. வண்டியூர் தெப்பக்குளம்.
8. தஞ்சாவூர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4;
ASSOCIATE EDITOR; R. VENKATARAMAN,

கண்ணன் கிளைக் கழகம்

திருப்பனந்தாள்
- உபதலைவர்: அரு. சிவசுப்பிரமணியன்
- பொருளாளர்: இர. ஷண்முகம்
- சா. வைத்தியநாதன்
- செயலாளர்: பர. ம. சம்பந்தம்

எட்டுப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'மதியம்' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு, பொங்கல் இதழ் சிறந்த கதைகளுடன் வெளியிடப்பட்டது. ஷண்முகம், புதுத் தெரு என்ற விலாசத்திற்குக் கதை அனுப்பலாம்,

குயப்பேட்டை வேலூர் (வ. ஆ.)
- உபதலைவர்; V. N. வேதமூர்த்தி
- செயலாளர்: சேகர்
- பொருளாளர்: உதயகுமார்

பதினைந்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'செந்தமிழ்' (மாதமிருமுறை), 'சிந்தனைச் சிற்பி' (வாரப் பத்திரிகை) என்ற கையெழுத்துப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காந்திஜி வாசகசாலை திறக்கப்பட்டிருக்கிறது. கதைகள் அனுப்ப விருப்பமுள்ளவர்கள் 6, K. K நாயுடு தெரு, குயப்பேட்டை, வேலூர் (வ. ஆ.) என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

ஆதியப்பநாய்க்கன் தெரு சென்னை-1
- உபதலைவர்; V. K. சாமி
- செயலாளர்: R. K. ஆனந்தன்
- உப செயலாளர்: S. குமாரவேலு
- பொக்கிஷதார்: பாண்டுரங்கன்

பன்னிரண்டு அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. வாசகசாலை ஒன்று ஏற்படவிருக்கிறது.

பேனா நண்பர்கள்:

1. K. N. நித்யானந்தம், 28. ரொட்டிக் கிடங்கு, திருவேங்கட முதலித் தெரு, சென்னை-7.
2. S. சந்தானம், S/o S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், 2/23. பெருமாள் கோயில் தெரு, செங்கம், (வ. ஆ.)
3. K. ரகுநாத், S/o Dr. K. P. கெரிசன், செர்ரி ரோடு, சேலம்.
4. பெனடிக் ராமையா, 90. அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13
5. V. சோமசுந்தரம், கீழத் தெரு, குடப்பாறை, சிப்பிப்பாறை போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா.
6. M. சோமசுந்தரம், ரைஸ் மில், குமரர் கோயில் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.
7. P. பத்மநாபன், நான்காவது படிவம். c; செயிண்ட் அந்தோணி ஹைஸ்கூல், கூனூர், (நீலகிரி)
8. N. ராஜாமணி, 10. லஜபதிராய் ரோடு, தல்லாகுளம், மதுரை.
9. V. ஜயராமன், 39. முத்துமுதலித் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14.
10. C. K. கிருஷ்ணசாமி, அசோகா மாணவர் ஹாஸ்டல், கண்டி, இலங்கை.

Reg. No. M. 55

பரிசுப் பாக்கெட்டுகள்

குழந்தைகளுக்கு ஏற்ற சிறந்த பரிசு, புத்தகங்கள்தான். உங்கள் குழந்தைகளுக்கோ உங்கள் உறவினர், நண்பர்களின் குழந்தைகளுக்கோ கொடுக்கக்கூடிய சிறந்த புத்தகங்கள் கண்ணன் வெளியீடுகள். அழகிய பரிசுப் பாக்கெட்டுகளாகக் குறைந்த விலையில் இப்போது கிடைக்கின்றன. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே!' என்பார்கள் அல்லவா? ஐந்து முதல் பதினைந்து வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் ஏற்ற புத்தகங்கள்.

சின்னராஜா	0	12	மின்னல் அரக்கன்	0	8
பவழவல்லி	0	12	ஏரிக்கரை மாளிகை	0	8
ஜக்கு	0	8	மாஸ்டர் பாலகுமார்	0	4
தவளையும் காளையும்.	0	8	குளிகைத் தீவு	0	4
கழுகும் கிளியும்	0	8	தூங்கும் அழகி	0	4
சமர்த்து மைனா	0	8	பார்வதியும் குள்ளர்களும்	0	[illegible]
விஞ்ஞானம் பேசுகிறார்	0	8	என் பேர் என்ன?	0	[illegible]
விளையும் பயிர்	0	8	நீச்சல் பழக்கம்	[illegible]	[illegible]
வால் அறுந்த குரங்கு	0	8	கோழி விதைத்த நெல்	0	[illegible]

மொத்தம் ரூ. 7-8-0

பரிசுப் பாக்கெட்டுகளாக வாங்கினால்

ரூ. 5/- தான்

தேனாம்பேட்டையிலுள்ள காங்கிரஸ் கண்காட்சி முடியும் வரையில்தான பரிசுப் பாக்கெட்டுகள் கிடைக்கும். வெளியூரிலுள்ளவர்கள் காரியாலயத்துக்கே எழுதலாம்.

கலைமகள் ஸ்டால் நெ. 172

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை 4.

செய்திகள்

காங்கிரஸ் மகாசபை

சென்னை ஒரு வாரம்போலத் திமிலோகப்பட்டது. சென்னைக்கு அடுத்த ஆவடியில் காங்கிரஸ் மகாசபையின் 60-ஆவது கூட்டம் நடைபெற்றதைத்தான் சொல்கிறோம். காங்கிரஸ் மகாசபை ஆவடியிலுள்ள சத்தியமூர்த்தி நகரில் நடைபெற்றது. இதற்கென ஒரு தனி ரெயில்வே ஸ்டேஷனை அமைத்திருந்தார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். சுமார் 4 லக்ஷம் ஜனங்கள் இந்த மகாசபை நடவடிக்கைகளைக் கண்டு களித்தார்கள். சென்னையிலிருந்து ஆவடிக்குச் செல்ல ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு பஸ் விடப்பட்டது. மகாநாட்டு மேடையையும் அதன் சுற்றுப்புற வாசல்களையும் ஜெமினி ஸ்டூடியோ ஸ்தாபனம் மிகச் சிறப்பாகக் கட்டியிருந்தார்கள். தென்னாட்டு ஆலயத்தைப் போன்ற தலைவாயிற் கோபுரம் அற்புதமாகக் காட்சியளித்தது. நேரு, ஆஸாத், ராஜாஜி, கட்ஜு, கோவிந்த வல்லப பந்த் போன்ற தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். யுகோ நாட்டுத் தலைவர் டிட்டோவும் வந்திருந்தார். இதுவரையில் இவ்வளவு பெரிய காங்கிரஸ் மகாசபை கூடியதேயில்லை என்று தெரிகிறது. இந்த மகாசபையை எந்த விதக் குறையுமில்லாமல் நடத்திவைத்த வரவேற்புக் கமிட்டி பாராட்டுக்குரியது. கோபுரத்தை எழுப்பியதைப் போலவே ஆவடி காங்கிரஸின் ஞாபகத்தையும் அனைவரின் உள்ளத்திலும் அழியாதபடி சென்னை எழுப்பிவிட்டது.

கிரிக்கெட்

இந்தியா கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் பவால்பூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் மாட்சு டிராவாகிவிட்டது. இதை ஆரம்பித்திலேயே அனைவரும் எதிர்பார்த்ததுதான். முதல் இன்னிங்ஸில் இந்தியா 235 ரன்கள் எடுத்தது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 307 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 210 ரன்கள் எடுத்தது. இது நான்கு நாள் டெஸ்டானபடியால் நாலாம் நாள் முடிவாகிவிடவே டெஸ்ட் மாட்சு டிராவாகிவிட்டது.

எம். ஸி. ஸி. க்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே நாலாவது டெஸ்ட் மாட்சு அடிலெய்டு என்ற ஊரில் நடைபெறவிருக்கிறது. ஜனவரி 28 - ஆம் தேதி மாட்சு ஆரம்பம்.

அணுசக்தி

அணு சக்தியினால் இயற்கை யமைப்பைத் திருத்திப் பயனுள்ளதாக ஆக்கலாமாம். மலைகளைப் பிளந்து மத்திய ஆசியாவிலுள்ள பாலைவனங்களைச் செழிப்பான நிலங்களாக்கலாம். ஸஹாரா பாலைவனத்துக்கும் பாசன வசதி செய்யலாம். வட துருவத்தில் உறைந்து கிடக்கும் பிரதேசங்களைப் பசுங் காடாக ஆக்கலாம். லண்டனிலிருந்து மாஸ்கோ வரையில் ரெயில் போடலாம். இவ்விதமெல்லாம் அணுசக்தியைப் பயன்படுத்த முடியும் என்று ஒரு ரஷ்ய எஞ்சினியர் கூறுகிறார்.

குடியரசு தின விழா

1950 - ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26 - ஆம் தேதி இந்தியா குடியரசான நாள். இது ஆறுவது குடியரசு நாள். இந்த நாளை நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடினார்கள். குடியரசு தினத்தன்று சிலருக்குக் கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டன. பிரபல எஞ்சினியரும் ராஜ தந்திரியுமான ஸ்ரீவிசுவேச்வரையாவுக்குப் பாரத ரத்னம் என்ற பட்டம் வழங்கப்பட்டது. காசியைச் சேர்ந்த ஸ்ரீபகவான் தாஸ் என்பவரும் பாரத ரத்னம் என்ற பட்டம் பெற்றார்.

Reg. No. M. 5542

பரிசுப் பாக்கெட்டுகள்

குழந்தைகளுக்கு ஏற்ற சிறந்த பரிசு, புத்தகங்கள்தான். உங்கள் குழந்தைகளுக்கோ உங்கள் உறவினர், நண்பர்களின் குழந்தைகளுக்கோ கொடுக்கக்கூடிய சிறந்த புத்தகங்கள் கண்ணன் வெளியீடுகள். அழகிய பரிசுப் பாக்கெட்டுகளாகக் குறைந்த விலையில் இப்போது கிடைக்கின்றன. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே!' என்பார்கள் அல்லவா? ஐந்து முதல் பதினைந்து வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் ஏற்ற புத்தகங்கள்.

சின்னராஜா	0	12	மின்னல் அரக்கன்	0	8
பவழவல்லி	0	12	ஏரிக்கரை மாளிகை	0	8
ஜக்கு	0	8	மாஸ்டர் பாலகுமார்	0	4
தவளையும் காளையும்	0	8	குளிகைத் தீவு	0	4
கழுகும் கிளியும்	0	8	தூங்கும் அழகி	0	4
சமர்த்து மைனா	0	8	பார்வதியும் குள்ளர்களும்	0	3
விஞ்ஞானம் பேசுகிறார்	0	8	என் பேர் என்ன?	0	3
விளையும் பயிர்	0	8	நீச்சல் பழக்கம்	0	3
வால் அறுந்த குரங்கு	0	8	கோழி விதைத்த நெல்	0	3

மொத்தம் ரூ. 7-8-0

பரிசுப் பாக்கெட்டுகளாக வாங்கினால்

ரூ. 5/- தான்

தேனாம்பேட்டையிலுள்ள காங்கிரஸ் கண்காட்சி முடியும் வரையில்தான் பரிசுப் பாக்கெட்டுகள் கிடைக்கும். வெளியூரிலுள்ளவர்கள் காரியாலயத்துக்கே எழுதலாம்.

கலைமகள் ஸ்டால் நெ. 172

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை 4.